விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 98 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை (02.11.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி இலவச இணைப்பு உள்ளே...

# உலகத் தமிழர் அனைவரையும் நான் தொடர்ந்து காப்பாற்றுவேன்

## முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி

(சென்னை)

இலங்கை தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் காப்பாற்றும் பணியை தொடருவோம் என்று கருணாநிதி கூறியுள்ளார். தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலினும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவும் நேற்று விடியற்காலையில் அமெரிக்காவுக்கு டெசோ இயக்கம் சார்பாக தி.மு.க. தூதுவர்களாக புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். அமெரிக்காவில் ஐ.நா. சபையில் அவர்கள் அளித்திட இருக்கிற அறிக்கை நகல்களையும், சி.டி. போன்றவற்றில் எனக்கு ஒரு பிரதியை அளித்து சென்றார்கள். இரவு முழுவதும் திரும்ப திரும்ப அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஸ்டாலின் பிறந்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட, மிசா கைதியாகச் சிறைக்குள் இருந்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட, ஈழத் தமிழர்கள் வாழ்வில் இருள் நீங்கி ஒளி பிறந்திட வேண்டுமென்பதற்காக, அவர் பயணம் மேற்கொள்வதில் எனக்கு தனிச் சிறப்பான மகிழ்ச்சி ஏற்பட்டது. டி.ஆர்.பாலு பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அவரும் இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கான என்னுடைய கோரிக்கையைத் தாங்கி ஐ.நா. மன்றத்தில் அதனை வழங்குவதற்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

02



கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் பெய்துவரும் கடும் மழை, காற்று, வெள்ளத்தினால் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். வீதிகளின் குறுக்கே மரங்கள் வீழ்ந்து போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. புயல் பாரிய மரங்களையும் வேரோடு பெயர்த்துப் போட்டிருக்கிறது. அதில் ஒன்றை இங்கே காண்கிறீர்கள்.

# வங்கதேசக் கடலில் மியன்மார் அகதிகள் படகு மூழ்கியது

(இந்தியா)

வங்கதேசம் அருகே கடலில் படகு மூழ்கியது. அதில் பயணித்த 130 அகதிகள் கதி என்ன ஆனது என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. மியான்மர் நாட்டின் ராகின் மாநிலத்தில் சிறுபான்மையாக உள்ள முஸ்லிம்களுக்கும் புத்த மதத்தினருக் கும் கடந்த சில ஆண்டுகளாக மோதல் இருந்து வருகிறது. அவ்வப்போது வெடிக்கும் இனக் கலவரத்தால் ஏராளமான முஸ்லிம்கள் அண்டை நாடான வங்கதேசத்துக்கு அகதிகளாக செல்கின்றனர். கடந்த 10 நாட்களாக மியான்மாரில் மீண்டும் கலவரம் ஏற்பட்டு உள்ளது. இதில் 80க்கும் அதிகமானோர் பலியாயினர். ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

02

# மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கண்டியில் இருவர் நேற்று மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளதுடன், சிறுமியொருவர் படுகாயமடைந்துள்ளார். கண்டி, மடவல பசார் பகுதியைச் சேர்ந்த 58 வயதான தாயொருவரும் 20 வயதான அவரது மகளொருவருமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். 7 வயதான சிறுமியே படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்மாணியுடன் கட்டப்பட்டிருந்த கொடியில் ஆடைகளை உலர்த்துவதற்காக போட்டபோது,

02

# இளையராஜா கனடா இசை நிகழ்ச்சி இரத்து

(சென்னை)

சாண்டி புயல் பாதிப்பு காரணமாக இளையராஜாவின் இசை நிகழ்ச்சி வேறொரு திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதனை இளையராஜாவே அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

இசைஞானி இளையராஜாவின் இசை நிகழ்ச்சி வரும் நவம்பர் 3ஆம் திகதி கனடாவிலும், தொடர்ந்து அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோவிலும் நடக்கவிருந்தது.

இதில் கனடா நிகழ்ச்சிக்கு தமிழ் அமைப்புகள் சில எதிர்ப்பு தெரிவித்தன. ஆனால் நிகழ்ச்சி நடத்துவதில் உறுதியாக இருந்தார் இளையராஜா. இந்த நிலையில், அமெரிக்காவின் சாண்டி புயல் தீவிரமடைந்து, அனைத்து விமான சேவைகளும் நிறுத்தப்பட்டுவிட்டதால் இளையராஜாவின் கனடா பயணம் இரத்து செய்யப்பட்டது.

இசைக் கலைஞர்களும்

02

# இலங்கையை எச்சரிக்கிறது சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு

இலங்கையில் நீதித்துறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கது என்று சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இலங்கையில் அண்மைக் காலமாக நீதித்துறைக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டத்துறை மீது

02

# நவம்பர் 5, ஐ.நா.வில் இலங்கைக்கு மீண்டும் நெருக்கடி வருகின்றது

(ஜெனிவா)

இலங்கை தொடர்பான உலகளாவிய காலக்கிரம மீளாய்வு அறிக்கை நேற்று முதல் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் விவாதிக்கப்படுகின்றது. இதன் போது இலங்கை தனது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது. மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் பிரதிநிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்த அறிக்கையினை சமர்ப்பிக்க உள்ளார்.

இலங்கை சார்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்க உள்ளிட்ட, சட்டமா அதிபரின் பிரதிநிதி குழுவினர் அமர்வில்

02

# நிவாரணம் வழங்க பணத்திற்கு குறைவில்லை - மஹிந்த அமரவீர

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க நிதி நெருக்கடி இல்லை எனவும் 200 மில்லியன் ரூபா பணம் இருப்பில் உள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிதியும் மீதமிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு அமைச்சின் அதிகாரிகளுக்கான விடுமுறையும் இரத்து

02

# முள்ளிவாய்க்காலில் கைப்பற்றப்பட்ட புலிகளின் ஆட்லறிகள் சீனத் தயாரிப்புகளாம்

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நேற்று கண்டு பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 5 ஆட்லறிகள் சீனத் தயாரிப்புக்கள் என்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

இந்த ஆட்டிலறிகள் விடுதலைப் புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து இலங்கை இராணுவத்தரப்பு அதிர்ச்சியடைந்துள்ளது.

நீலம் புயலினால் ஏற்பட்ட மண்அரிப்பை அடுத்து, விடுதலைப் புலிகளால் கரையோரத்தில் புதைத்து வைக்கப்பட்ட 5 ஆட்லறிகளை இலங்கை இராணுவத்தினர் நேற்று மீட்டுள்ளனர்.

இவை அனைத்தும் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் போது விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் இந்த ஆட்லறிகள் மூன்றரை ஆண்டுகளாக கண்டுபிடிக்கப் படாதது குறித்து இலங்கை இராணுவத்தரப்பு அதிர்ச்சியடைந்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், முள்ளிவாய்க்காலில் இலங்கை படையினர் 3 ஆண்டுகளாக தொடர் தேடுதல்களை நடத்தியிருந்தனர்.

நீலம் புயலினால், காட்டிக்கொடுக்கப்பட்டு மீட்கப் பட்டுள்ள இந்த ஆட்லறிகள் விடுதலைப் புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன என்ற விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்துள்ளது.

இவை விடுதலைப் புலிகளால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது இலங்கை இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப் பட்டவையா என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, முதல்முறையாக ஒரே தடவையில் விடுதலைப் புலிகளின் 5 ஆட்லறிகளை கைப்பற்றியுள்ள இராணுவத்தினர் அந்தப் பகுதியில் தேடுதல்களை தீவிரப்படுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு

புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஜித்திற்கும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸூற்கும் இடையில் சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளது.

இதன்போது இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன்,இலங்கையின் மீள்குடியேற்றம் தொடர்பில் புதிய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலும் இதன்போது ஆராயப்படும் என்று "டே அனட் நைட்" என்ற இந்திய இணைத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்து சமூத்திர ஒத்துழைப்பு நாடுகளில் மாநாடு தற்போது இந்தியாவில் இடம்பெற்று வரும் நிலையில், அதில் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் பங்குகொண்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சந்திரகுமார் எம்.பி. - சிறீதரன் எம்.பி. மோதல்

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு விசேட கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், தண்ணீர்ப் போத்தல்களால் தாக்க முற்பட்டதை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. திவிநெகும சட்டமூலம் தொடர்பாக எழுந்த வாக்குவாதத்தினை அடுத்து, இது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன்போது முருகேசு சந்திரகுமார் எம்.பி குறுக்கிட முற்பட்டதை அடுத்து "நான் உம்மோடு கதைக்கவில்லை நீர் அமைதியாய் இரும்" என்று ஸ்ரீதரன் எம்.பி குறிப்பிட்டார். இதனால் கோபமடைந்த சந்திரகுமார் எம்.பி, அவருக்கு முன்னால் இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது வீசுவதற்கு முற்பட்டார்.

பதிலுக்கு அங்கிருந்த தமிழ் தேசியக் நாடாளுமன்ற உறுப்பினர்களும், நீர் தாக்கினால் நாங்களும் தாக்குவோம் என்று கூறினர். இதற்கிடையில் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பெரும் ஆரவாரங்களை மேற்கொண்டனர்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இரு தரப்பினரும் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி கூட்டத்தை நிறைவு செய்தார்.

# கூந்தலுக்குள் மறைத்து வைத்து தங்க பிஸ்கட் கடத்தல்

கூந்தலுக்குள் மறைத்து வைத்து ரூ.23 லட்சம் மதிப்பிலான தங்க பிஸ்கட்டுகளை கடத்திய இலங்கைப் பெண், விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். கொழும்பில் இருந்து சென்னைக்கு தங்கம் கடத்தப்படுவதாக சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் கொழும்பில் இருந்து வந்த அனைத்து விமானங்களையும் அதிகாரிகள் கண்காணித்து கொண்டிருந்தனர். இந்நிலையில் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பில் இருந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் சென்னை வந்தது. அதில் வந்த பயணிகளை சுங்க அதிகாரிகள் தீவிர சோதனை நடத்திய போதே இதனைக் கண்டுபிடித்தனர்.

# நவம்பர் 5...(தொடர்)

பங்கேற்கின்றனர். இந்த அமர்வில் இலங்கை குழுவானது, நாட்டின் எதிர்வரும் 5 வருடங்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான மேம்பாட்டு திட்டங்களை முன்வைக்க உள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள், கியூபா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள், சபை அமர்வின் போது கேள்வியெழுப்பவுள்ளன. இந்த நிலையில், எதிர்வரும் 5 ஆம் திகதி இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையை எச்சரிக்கிறது...(தொடர்)

தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், இலங்கையில் நீதித்துறை பாதுகாக்கப்பட வேண்டும் என சர்வதேச ஜூரி ஆணைக குழுவின் ஆசிய பணிப்பாளர் ஷேம் சராசி தெரிவித்துள்ளார். நீதித்துறைக்கு எதிராக செயற்படுபவர்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படாவிட்டால், எதிர்காலத்தில் இலங்கை பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.

இந்தநிலையில், இலங்கையில் நீதித்துறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து தமது நிறுவனம் கவனம் செலுத்தும் என ஷேம் சராசி தெரிவித்துள்ளார்.

# உலகத் தமிழர் அனைவரையும்...(தொடர்)

அவர்களின் இந்தப் பயணம் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். என்னுடைய வாழ்த்துகள் மட்டுமல்ல, ஈழத் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ள அத்தனை தமிழர்களும் இந்த பயணம் வெற்றி பெறவும், ஈழத் தமிழர் வாழ்வில் விடியல் காணவும் வாழ்த்த வேண்டும்.

2012ல் தமிழக அரசின் எதிர்ப்புக்கிடையில் மிகச் சிறப்பாக நடத்திய டெசோ மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்களை வடித்தெடுத்தோம். அந்தத் தீர்மானங்களை ஐ.நா. மன்றத்தில் இந்தியா கொண்டு செல்ல வேண்டுமென்று பிரதமருக்கு கடிதமும் நான் எழுதினேன். கடிதத்தை பிரதமரிடம் கடந்த 21-8-2012ல் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு பிரதமர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்ததோடு, ஏற்கனவே ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா நமது வேண்டுகோளை ஏற்று ஆதரித்தது என்பதையும் நினைவு கூர்ந்தார். பிரதமருக்கு எழுதிய கடிதத்தின் நகலை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா காந்திக்கும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று அளித்தனர். என்னுடைய கடிதத்திற்கு பதில் எழுதிய பிரதமர் மன்மோகன் சிங், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கும், நல்வாழ்வுக்கும் தேவையான பணிகளில் இந்திய அரசு அக்கறை காட்டி வருகிறது என்றும், ஈழத் தமிழர்களின் மறு குடி அமர்வு மற்றும் மறுவாழ்வுக்கு இந்திய அரசு மிகுந்த முன்னுரிமை வழங்கிச் செயல்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார்.

மேலும், அதிகாரப் பகிர்வு குறித்து ஈழத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டியதன் அவசியத்தையும் இலங்கை அரசுக்கு தெரிவித்திருக்கிறோம் என்றும், எதிர்காலத்தில் ஈழத் தமிழர்கள் சம உரிமை, கௌரவம், சமநீதி மற்றும் சுயமரியாதையுடன் வாழக் கூடிய நிலையை உருவாக்கிட இலங்கை அரசுடன் இந்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்திருந்தார்.கடந்த 3-10-2012ல் என் தலைமையில் டெசோ அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அதில் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், ஈழத் தமிழர்கள் அரசியல் உரிமைகளையும், வாழ்வுரிமைகளையும் குறித்த எனது கோரிக்கை மனுக்களை நியூயார்க்கில் உள்ள ஐ.நா. பொதுச் செயலாளரிடமும் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடமும் வழங்க முடிவெடுத்து இந்தக் கோரிக்கை மனுக்களை மு.க. ஸ்டாலினும், டி.ஆர்.பாலுவும் நேரில் சென்று அளிப்பார்கள் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக 1956ம் ஆண்டிலிருந்து திமுக தொடர்ச்சியாக மேற்கொண்ட எத்தனையோ முயற்சிகளில், இந்தப் பயணமும் ஒன்றாக வரலாற்று பதிவேட்டில் இடம் பெறும். இந்த பயணம், பயனுள்ள பயணமாக, வெற்றி பயணமாக அமைந்து, இலங்கைத் தமிழர் வாழ்வில் அமைதியும், அனைத்து ஜனநாயக உரிமைகளும் கிடைக்க வேண்டுமென்று உலகத் தமிழர்கள் எல்லாம் விரும்புவதைப் போலவே நாமும் பெரிதும் விரும்புகிறோம்.

ஆனால், நமது தமிழர்களிலேயே ஒரு சிலர் இனப் பகைவர்களை எதிர்க்கிறார்களோ இல்லையோ, நம்மை எதிர்ப் பதில்தான் இன்பம் காணுகிறார்கள். சிலர் என்னை தூற்றுகிறார்கள் என்பதற்காக நான் என்றைக்கும் வருத்தப்பட்டதில்லை.

என்னை இப்போது தூற்றுகிற வர்கள் எல்லாம் முன்பு என்னைப் பாராட்டியவர் கள்தான். நாளை மீண்டும் என்னை பாராட்டப் போகின்றவர்கள் தான்.

போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும், என் கடன் பணி செய்துகிடப்பதே என்பதை மனதில் செதுக்கி வைத்துக்கொண்டு, சிந்தனையைச் சிதற விடாமல், நமது நல்ல பணியைத் தொடருவோம். இங்கேயுள்ள தமிழர்களை மட்டுமல்ல இலங்கைத் தமிழர்களையும், உலகத் தமிழர்களையும் உணர்வு பூர்வமாகக் காப்பாற்றவும், அவர்களை முன்னேற்றவும், நம்மால் முடிந்த பணிகளை முனைப்புடன் தொடருவோம், அதற்கெனவே ஐ.நா. பயணம் மேற்கொண்டுள்ள ஸ்டாலின், பாலு ஆகியோரின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம். இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார்.

# மின்சாரம் தாக்கி...(தொடர்)

இவர்கள் மின்சாரத் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே உயிரிழந்ததாகவும் பொலிஸார் கூறினர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்துகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இளையராஜா இசை...(தொடர்)

போகவில்லை. இதைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் ரத்து செய்யப்பட்டு, வேறு திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இது குறித்து இளையராஜா கூறுகையில், "சான்டி புயல் பாதிப்பு காரணமாக, எனது பயணம் இரத்து செய்யப்பட்டது. நிகழ்ச்சியை வேறு திகதியில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நாளை உங்களைப் போலவே நானும் ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் காத்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிக்கு அனைவரும் தவறாமல் வந்து எப்போதும் போல ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்றார்.

# நிவாரணம் வழங்க...(தொடர்)

செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்க அதிகாரிகள் 24 மணிநேரமும் செயற்பட்டு வருவதாகவும் குறைபாடுகள் இன்றி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# வங்கதேசக் கடலில்...(தொடர்)

இந்நிலையில், வங்கதேசத்தில் தங்கியிருந்த மியான்மர் அகதிகள் சிலர் கடந்த சில தினங்களுக்கு முன்பு சட்டவிரோதமாக படகில் மலேசியா புறப்பட்டனர். 70 பேர் செல்லக் கூடிய படகில் 136 பேர் பயணம் செய்ததாக தெரிகிறது. அந்த படகு, வங்கதேசம் மியான்மர் எல்லை அருகே கடந்த திங்கள்கிழமை இரவு சென்றபோது பாறையில் மோதி கவிழ்ந்தது.

இதில் 6 பேர் மட்டும் தப்பினர். அவர்களை வங்கதேச மீனவர்கள் மீட்டனர். அவர்களிடம் போலீசார் விசாரித்தபோது மேற்கண்ட தகவல்கள் தெரியவந்தது. படகில் பயணித்த 130 பேரின் கதி என்ன ஆனது என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

# ஐந்து நாட்களாகக் கொட்டித் தீர்த்த மழையால் 68,217 பேர் பாதிப்பு

## பாதிப்பு அதிகரிப்பு

### ✦மூவர் உயிரிழப்பு ✦12பேர் படுகாயம்

நாட்டில் கடந்த ஐந்து தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பெண்ணொருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த அனர்த்தங்களினால் 18 ஆயிரத்து 187 குடும்பங்களைச் சேர்ந்த 68ஆயிரத்து 217பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட 17 மாவட்டங்களில் 62 கிராம சேவகர் பிரிவுகளில் ஏற்பட்ட கடும் காற்று, வெள்ளப்பெருக்கு, கடலரிப்பு, கடும்மழை, மரம் முறிந்து விழுந்தமை மற்றும் மண் சரிவு ஆகிய இயற்கை அனர்த் தங்களினாலேயே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இயற்கை அனர்த்தங்களினால் 2932 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 41வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட 1,917 குடும்பங்களைச் சேர்ந்த 7,434 பேர் 37 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு, நுவரெலியா, கேகாலை, குருநாகல், கண்டி, கொழும்பு, திருகோணமலை, கிளிநொச்சி, கம்பஹா, மாத்தளை, மன்னார், மாத்தறை, காலி, வவுனியா, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் 6,926 குடும்பங்களைச் சேர்ந்த 23,894 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 543 குடும்பங்களைச் சேர்ந்த 1,814 பேர் 10 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 2 கிராம சேவகர் பிரிவுகளில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் 3 கிராம சேவகர் பிரிவுகளில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 27பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, ஐந்து வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 13 கிராம சேவகர் பிரிவுகளில 4,357 குடும்பங்களைச் சேர்ந்த 16,419 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 770 குடும்பங்களைச் சேர்ந்த 2,914பேர் 13 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 கிராம சேவகர் பிரிவுகளில் 1,223 குடும்பங்களைச் சேர்ந்த 4,446 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 55பேர் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 6 கிராம சேவகர் பிரிவுகளில 1,338 குடும்பங்களைச் சேர்ந்த 5,331 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 5 கிராம சேவகர் பிரிவுகளில் 202 குடும்பங்களைச் சேர்ந்த 794 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, மாத்தறை, கம்பஹா யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





## யாழ்ப்பாணத்தில் சாஜனாக பதவிஉயர்வு

மதுவரி திணைக்கள சாஜனாக யாழ்.மாவட்டத்தில் இருந்து 4 பேர் பதவியுயர்வு பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட மதுவரி திணைக்களம் தெரிவித்தது.

நாடாளாவிய ரீதியில் பூராகவும் நடைபெற்ற மதுவரி சாஜன் பதவியுயர்வு பரீட்சைக்கு 450 பேர் தோற்றிய நிலையில் 67 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட 67 பேரில் 4பேர் யாழ்.மாவட்டத்தினை சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கான விசேட வதிவிடப் பயிற்சி கொழும்பு மதுவரி திணைக்களத்தில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடும் காற்று, மழையினால் 14 மீன்பிடிப் படகுகள் சேதம்

யாழ்ப்பாணத்தில் கடந்த 4 நாட்களாக பெய்த கடும் மழை மற்றும் காற்றினால் மீனவர்களின் 14 படகுகள் சேதமடைந்துள்ளதாக நீரியல்வளத்துறை மற்றும் கடற்றொழிலாளர் திணைக்களத்தின் யாழ்.அலுவலக உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கரையோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த படகுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன. நெடுந்தீவில் 8 படகுகளும் நாகர் கோவிலில் 4 படகுகளும் இன்பசிட்டிக் கரையோரத்தில் 2 படகுகளும் சேதமடைந்துள்ளன. படகுகள் சேதமடைந்தமையால் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன. இதனால் மீனவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, தும்பளை மற்றும் குடத்தனை பகுதிகளிலுள்ள மீனவர்களின் வீடுகளினுள் வெள்ள நீர் புகுந்துள்ளன. இவர்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் சமைத்த உணவு வழங்கப்பட்டுவருவதாகவும் நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழிலாளர் திணைக்களத்தின் யாழ். அலுவலக உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## ஊறணி கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம்

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர், ஊறனி கிராம மக்களுக்கு 30 வருடங்களுக்கு பின்னர் குடிநீர் விநியோகம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை வலி.கிழக்குப் பிரதேச சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தூர், ஊறணி கிராம குடியேற்றத்திட்டம் ஆரம்பமான காலம் தொடக்கம் இன்று வரை அக் கிராம மக்கள், குடிநீரை பெறுவதற்கு 2 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றே பெற்றனர்.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பிரதேச வாழ் மக்களினால் வலி. கிழக்குப் பிரதேச சபையிடம் குடிநீர் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச சபையினால் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாள் தோறும் குறித்த கிராமத்திற்கு 3,000 லீற்றர் குடிநீரினை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

## புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி பாராட்டு

யாழ்ப்பாணத்தில் கல்வித்தரம் மேலும் உயர்வடைவதற்காக இங்குள்ள படையினர் அயராது பாடுபடுவதாக யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஆசிச் செய்தியிலேயே இவ்வாறு கூறினார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ்.படைகளின் கட்டளைத் தளபதியென்ற வகையில் வெற்றி பெற்ற மாணவர்களை மனதாரப் பாரட்டுகின்றேன். வெற்றி பெற்ற மாணவர்கள் தமது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இப்போது உங்கள் மாணவப் பருவத்தில் முதல் வெற்றியை நீங்கள் பெற்றுள்ளீர்கள். எதிர்காலத்தில் உங்களின் கற்றல் செயற்பாட்டில் நீங்கள் பல சவால்களை சந்திப்பதற்கு நேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு படையினர் உங்களுக்கு பக்கபலமாகவிருந்து உங்கள் கல்வியின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பார்களென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா,

இலங்கை அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள இலவசக் கல்வித் திட்டத்திஅ நாம் தலைசாய்க்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டு வரும் பொதுக்கலை திட்டம் உலகிலேயே சிறப்பு வாய்ந்த ஒரு திட்டம் ஆகும்.

எந்தவொரு நாட்டிலும் இல்லாதவாறு இலங்கையில் 99 வீதமான வருமானங்கள் இலவச கல்வி திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற தென்பதை ஒவ்வொரு பிரஜையும் உணர வேண்டும் என்றார்.

## இன்றைய இராசி பலன் (02.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**நட்சத்திரம்** : ரோகிணி மு.ப. 10.49 வரை அதன் பின் மிருகசீரிடம்
**திதி** : திருதியை காலை 7.40 வரை. அதன் பின் சதுர்த்தி
**சுபநேரம்** : 6.04 - 7.34 **இராகுகாலம்** : 10.34 -12.04
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தற்பெருமை, தொழில் மந்தநிலை, மற்றவர்களால் நிந்தனை
**இடபம்** : வியாபார விருத்தி, பிரதியுபகாரம், மேலதிக வருமானம்
**மிதுனம்** : சிந்தித்து செயலாற்றல், நிலுவைகள் சேரும், வேலையாட்கள் ஒத்துழைப்பு
**கடகம்** : வருமானம் குறைவு, தொழில் குழப்பம், உறவினர் தொல்லை
**சிங்கம்** : காரிய தாமதம், சுயநலப் போக்கு, நண்பர்கள் உதவி
**கன்னி** : எதிர்பார்ப்பு வெற்றி, மகிழ்ச்சியான செய்தி, திட்டமிட்டு செயலாற்றுதல்
**துலாம்** : உடல்நலம் நன்று, கடன்தொல்லை நீங்கும், புத்திசாதுரியம்
**விருச்சிகம்** : வீண் முயற்சி, மருத்துவச் செலவு, ஓய்வு குறைவு
**தனுசு** : பொருள் கஷ்டம், தாமத காரியம், அவதானம் தேவை
**மகரம்** : நற்காரிய செய்கை, தொழில் திறமை, நிலுவைகள் சேரும்
**கும்பம்** : வீண்செலவினம், அவதானம் தேவை, வாய்ப்பை பயன்படுத்துதல்
**மீனம்** : தெய்வ காரிய செய்கை, இரக்க சுபாவம், பிரயாணம் நன்மை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# முஸ்லிம் தலைவர்களின் அரசியல் துயரத்தையே தருகிறது

**- மொஹமட் பைசால்**

அநுராதபுரத்தில் முஸ்லிம்களின் புனித நாளான ஹஜ்ஜுப் பெருநாளன்று பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் சமுதாயம் முழுவதற்கும் இச்சம்பவம் அதிர்ச்சியையும் மிகப் பெரிய சோகத்தையும் உருவாக்கியுள்ளது என முஸ்லிம் இடதுசாரி முன்னணி பொதுச்செயலாளர் மொஹமட் பைசால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வரை இச்சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. அரசாங்கத்தில் ஒட்டியிருக்கும் முஸ்லிம் தலைவர்கள் வெட்கமில்லாமல் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என வழமைபோல் கூறத் தொடங்கியுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தமது கண்டனங்களையோ அரசாங்கத்திற்கு அழுத்தங்களையோ இவர்கள் வழங்காமல் இருந்து வருகின்றனர். ஒன்றல்ல இரண்டல்ல இருபதுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலைமை மேலும் தொடர்வதற்கு உரிய சூழ்நிலைகளே உருவாகி உள்ளன.

முஸ்லிம் தலைவர்களின் சரணாகதி அரசியல் செயற்பாட்டால் நாம் இந்த துயரத்தை அனுபவிக்கிறோம். வரலாற்றில் என்றும் இல்லாத அளவில் இந்த பேரினவாத அரசாங்கத்திற்கு எமது தலைவர்கள் ஆதரவை வழங்குகி வருகின்றனர். மறுபக்கத்தில் வரலாற்றில் என்றும் இல்லாத அளவில் துயரத்தை நாம் அனுபவித்து வருகின்றோம்.

அரசாங்கம் தமக்கு ஆதரவை வெளிப்படுத்துமாறு கேட்கும்போதெல்லாம் பல்வேறு வழிகளில் மக்களை வீதிக்கு கொண்டு வந்து அரசாங்கத்திற்கு சார்பாக குரல்கொடுக்க வைக்கின்றனர். ஆனால் எம் மக்கள் மீது கொடுமைகள் இழைக்கும்போதும் மௌனவாகவே இருக்கின்றனர்.

இன்றைய காலப்பகுதியில் முஸ்லிம் சமுதாயம் ஆட்சியா-ளர்களுக்கு எதிராகவே உள்ளனர். இதை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவு நன்கு புலப்படுத்தியுள்ளது. ஆனால் முஸ்லிம்மக்களின் முடிவிற்கு எதிராகவே முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்ததன் மூலம் கிழக்கு மாகாண சபை அரசாங்கத்திற்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. அது போதாது என்று "திவிநெகும" சட்டத்திற்கும் ஆதரவையும் முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரசின் இத்துரோகச் செயல் குற்றுயிராக இருந்த பேரினவாதத்தளம் மீண்டும் பலம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இன்றைய காலகட்டத்தில் இந்த பேரினவாத அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்து எழும் தென்னிலங்கை சக்திகளுடன் கைகோர்த்து செயற்பட நாம் தயாராக வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் இறக்குமதிக்கு ஜனாதிபதி உடனடி உத்தரவு

மக்களின் தேவைகளை அறிந்து உடனடியாக எரிபொருள் இறக்குமதியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார். சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உரிய முறையில் பராமரிக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். நுகரவோருக்கு எரிபொருள் விநியோகம் மற்றும் மின்சார விநியோகத்தின் போது நட்டத்தை எவ்வாறு குறைப்பது என்பது பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

# யாழ் மாவட்ட செயலகத்தின் சிறுவர் தின விழா – 2012

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவினால் நாளை சனிக்கிழமை சிறுவர் தினவிழா, நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கொண்டா டப்படவுள்ளது.

"சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே" என்ற தொனிப்பொருளில் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ரூபினி வரதலிங்கம் தலைமையில் காலை 8.30 மணி முதல் பகல் 12.00 மணிவரையும் விழா நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் தி.விஸ்வரூபன், நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன், பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன், முன்பள்ளி அபிவிருத்திப் பணிப்பாளர் ஏ.ஆர். ஜெகதாம்பிகை மற்றும் சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவு அதிகாரியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# முன்னாள் புலிப் போராளிகள் 48 பேர் நேற்று விடுவிப்பு

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளில் ஏழு பெண்கள் உட்பட 48பேர் முழுமையான புனர்வாழ்வுக்குப் பின் நேற்று புதன்கிழமை உறவ-ினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இந்நிலையில், 782 முன்னாள் போராளிகள் இன்னமும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் அவர்களில் 19 பெண்கள் உள்ளடங்குவதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் குறிப்பிட்டார்.

இவர்கள், மன்னாரிலுள்ள மருதன்காடு, பூந்தோட்டம் ஆகிய புனர்வாழ்வு முகாம்களிலும் வெலிகந்தையில் அமைந்துள்ள சேனபுர மற்றும் கந்தர்கொட ஆகிய புனர்வாழ்வு முகாம்களிலும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட மேலும் 33பேர் அடுத்த மாதம் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஹெட்டியாரச்சி மேலும் கூறினார்.

# அமெரிக்க பொருளாதார தடையால் இருதரப்பு வர்த்தகத்தில் வீழ்ச்சி

அமெரிக்காவினால் ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை காரணமாக இலங்கையிலிருந்து தேயிலையை ஏற்றுமதி செய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை தொகையிலும், அங்கு சந்தையில் விநியோகிப்பதிலும் பல நெருக்கடிகளை முகங்கொடுக்க வேண்டியிருப்பதாக இலங்கை ஏற்றுமதி முகவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து 60 சத வீதத் திற்கும் அதிகமாக ஈரானுக்கே தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஈரான் மீதான பொருளாதாரத் தடை இருபக்க வர்த்தகத்தை பெரிதும் பாதித்துள்ளது.

இதனால் தேயிலை சந்தையில் இலங்கைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியில் கடந்த வாரத்தைவிட இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு 45 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் மாதய இறுதியில் கிலோ 452 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட தேயிலை தற்போது 407.31 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுமதி முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

# குற்றப் பிரேரணையில் கையெழுத்திடுவோர் அதிகார பகிர்விற்கு எதிரானவர்கள்

**- மனோ கணேசன்**

"நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு திவிநெகும என்ற சட்டமூலத்தை அடிப்படையாக கொண்டது. இந்த சட்டமூலம் 13 ஆம் திருத்தத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கத்தை கொண்டது. எனவே பிரதம நீதியசர் சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான அரசாங்கத்தின் குற்றப் பிரேரணையில் கையெழுத்து இடுகின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகார பகிர்விற்கு எதிரானவர்கள்" என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

"இந்த குற்றப் பிரேரணையில் இன்று வரை சுமார் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து இட்டுள்ளார்கள் என தெரிய வருகிறது. இந்த 120 பேரிலும் தொடர்ந்து கையெழுத்து போடப்போகின்றவர்களிலும் எத்தனை தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற போகின்றார்கள் என்று தமிழ் பேசும் மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இந்த குற்றப் பிரேரணையில் கைச்சாத்திடும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் மக்கள் மனதில் தமக்கு எதிராக தாமே குற்றப் பிரேரணையை நிறைவேற்றிகொள்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இதில் இரண்டு கருத்துக்கு இடம் கிடையாது. பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமிக்க முடியும். ஆனால், பதவி விலக்க முடியாது. அதனால் தான் இந்தக் குற்றப் பிரேரணை.

இந்த வழக்கின் ஒரு மனுதாரரான நான், நமது மனு மீதான விசாரணையின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்ப்பார்க்கிறேன். எது எப்படி இருந்தாலும், இந்த விவகாரம் தமிழ் பேசும் மக்களுக்கு மிகவும் முக்கியமானது.

எனவே இந்தக் கட்டத்தில் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்படும் குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்திடும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களை தமிழ் மக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள். கையெழுத்து போடும் ஒவ்வொருவரையும் தமிழர்கள் தூர விலத்தி வைக்க வேண்டும். இந்த பிரேரணையில் தமிழ் உறுப்பினர்கள் கைச்சாத்திடுவது வரலாற்று துரோகமாகும்" என்றும் மனோ கணேசன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவின் வாகன வர்த்தகச் சந்தை இலங்கையில் விரைவில் ஆரம்பம்

இலங்கையில் வாகன வர்த்தகச் சந்தையை சீனா ஆரம்பிக்கவுள்ளது. இதன் முதற்கட்டமாகத் தற்போது இலங்கையில் செயற்படும் சுவீடன் நாட்டுக்குச் சொந்தமான "வொல்வோ" மோட டார் நிறுவனத்தின் முழுமையான ஆதிக்கத்தை ஒழிக்கும் வகையில் சீனாவின் ஜீலி என்ற நிறுவனம் கொழும்பில் பாரிய வாகனச் சந்தை ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

அத்துடன் தற்போது இலங்கையில் செயற்படும் மைக்ரோ வாகன நிறுவனத்தையும் சீனா நீண்ட கால குத்தகைக்குக் கொள்வனவு செய்யவுள்ளது.

இதன்படி "மைக்ரோ" நிறுவனத்துக்கு இருபது மில்லியன் டாலர்களை சீன நிறுவனம் வழங்கவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஊரெழுவில் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு

(உடுவில்)

ஊரெழு கலை கலாசார மன்றம் மூத்த கலைஞர்களை கௌரவிக்கவுள்ளது. ஊரெழு மற்றும் உரும்பிராய் பகுதியிலுள்ள ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களின் சேவையினைக் கௌரவப்படுத்தி விருது வழங்கப்படவுள்ளது.

ஊரெழுவிலுள்ள கலைஞர்களின் விபரம் திரட்டப்பட்டு இம்மாதம் 4ஆம் திகதி நடாத்தப்படவுள்ள கலாசார விழாவில் அவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 14 வருடத்தின் பின்னர் லயன் எயார் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றி விசாரணை

14 வருடங்களுக்கு முன் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறப்படும் "லயன் எயார்" விமானத்தில் பயணித்தவர்களின் சடலங்களை தோண்டி எடுப்பதற்கு படையினர் நடவடிக்கை!

குறித்த விமானம் சுட்டு வீழ்த தப்பட்டதைத் தொடர்ந்து கடலில் மிதந்து வந்த சுமார் 10 முதல் 15 சடலங்களை நாச்சிக்குடா கடற்கரையில் புதைத்ததாக மீனவர்கள் வழங்கிய தகவல்களை அடுத்தே அந்த சடலங்களை தோண்டி எடுப்பதற்கு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சிதைவுகள் நாச்சிக்குடாவுக்கும் இரணைத்தீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் சுமார் 8 மீற்றர் ஆழத்தில் புதைந்திருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

அந்த சிதைவுகளையும் ஏக காலத்தில் அகழ்ந்தெடுப்பதற்கு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வணிகசூரிய தெரிவித்தார்.

## களனிகங்கை நீர்மட்டம் உயர்வு

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெய்து வரும் அடைமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக களனி கங்கையின் நீர்மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனால் அதனை அண்டிய பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் அனைவரும் தற்போது இடம்பெயர்ந்துள்ளனர்.

மேலும் ஜின்கங்கை, களுகங்கை மற்றும் நில்வள கங்கைகளின் நீர்மட்டம் தொடர்ச்சியாக உயர்ந்து வருவதனால் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

# மக்களின் தேவைக்கு ஏற்றவாறு எரிபொருளை இறக்குமதி செய்யுங்கள்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு


நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து உடனடியாக எரிபொருள் இறக்குமதியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் கூறுகையில், மக்களின் அவசர தேவைகளை அறிந்து உடனடியாக எரிபொருள் இறக்குமதியை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன்,

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உரிய முறையில் பராமரிக்க வேண்டுமெனவும் கூறினார்.

இச் சந்திப்பில் நுகர்வோருக்கு எரிபொருள் விநியோகம் மற்றும் மின்சார விநியோகம் செய்யும்



போது ஏற்படும் நட்டத்தை எவ்வாறு குறைப்பது என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

# வெள்ள நீரை வெளியேற்ற உதவுமாறு வேண்டுகோள்

மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து தங்களது வீட்டு வளவுகளில் புகுந்துள்ள வெள்ளநீரை வெளியேற்ற முடியாத நிலையில் தாங்களுள்ளதாக மன்னார் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன், சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளாதாகவும் அப்பிரதேசவாசிகள் கூறியுள்ளனர்.

எனவே, வெள்ளநீரை வீடுகளிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் எடுக்கவேண்டுமென இப்பிரதேசவாசிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் நகரசபையின் உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் கூறுகையில்,

மன்னார் நகரசபை வெள்ளநீரை வாய்க்கால் வழியாக வெளியேற்றும் நடவடிக்கையை தற்போது மேற்கொண்டுள்ளது. எனினும், மன்னார் நகரசபையில் பணியாளர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்நிலையில் மேலதிகமாக பணியாளர்களை இணைத்துக்கொண்டு வெள்ளநீரை வெளியேற்றும் நடவடிக்கையில் மன்னார் நகரசபை ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.

## திருமலையில் 3 குளங்கள் உடைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக 3 சிறு குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக அறிவிக்கப்ட்டுள்ளது.

கடந்த நாட்களில் பெய்த கடும் மழை காரணமாக அதிகரித்த மழை வெள்ளம் ஏற்பட்டதனால் இக்குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கலக்கேணிகுளம் மற்றும் பாலக்கட்டு குளம் என்பனவும் திருகோணமலை வடக்கில் உள்ள வெகட்வெற்றிவேவ என் னும் குளமுமே உடைப்பெடுத்துள்ளன..

# செல்வம் எம்.பி.யின் உறவினரை காணவில்லை என பொலிஸில் புகார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் , செல்வம் அடைக்கலநாதனின் உறவினர் ஒருவரை கடந்த 30 ஆம் திகதி முதல் காணவில்லை என காணாமல் போனவரது மனைவி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

தனது மனைவியின் சகோதரரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் (வயது-60) என்பவரே காணமல் போயுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கடந்த 30 ஆம் திகதி காலை 6.15 மணியளவில் குறித்த நபர் தனது வீட்டில் இருந்து, தான் வேலை செய்யும் கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகைக் கடைக்குச் சென்ற பின் மனைவியுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

அதன் பின்னரே அவர் காணாமல் போயுள்ளதாக, காணாமல் போன சின்னத்துரை இந்திரேஸ்வரன் என்பவரின் மனைவி தெரிவித்தார். காணாமல் பொன சின்னத்துரை இந்திரேஸ்வரன் நகைக் கடையில் கணக்காளராக கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தனது மனைவியின் சகோதரர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் தான் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

## ரயில் விபத்தில் இருவர் பலி

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் முச்சக்கரவண்டி மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வெயங்கொட பொலிஸ் பிரிவில் மீரிகம - கனேகொட ரயில் கடவையில் நேற்றுக் காலை இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த 27 மற்றும் 38 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

## புதையல்: 9 பேர் கைது

வலப்பனை - ஹல்கெட்டிவெல கலகன்வத்தை பகுதியில் அநாவசியமாக புதையல் தோண்டிக் கொண்டிருந்த 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வலப்பனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இன்று வலப்பனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## வான்கதவுகள் திறப்பு

நாடு முழுவதும் பெய்த அடைமழையினால் நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பியுள்ள நிலையில் மேல் கொத்மலை மற்றும் குக்குலேகங்கை ஆகிய நீர்தேக்கங்களின் அவசர வான்கதவுகள் திறக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

குக்குலேகங்கையின் மூன்று வான்கதவுகளும் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு அவசர வான்கதவுகளுமே திறக்கப்பட்டுள்ளன.

இதனால் அதனை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வாழ்வோர் பெருக்கெடுத்துவரும் நீரினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளும் வகையில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேல் கொத்மலையின் முதலாவது அவசர வான்கதவு கடந்த மூன்று தினங்களுக்கு முன்னரே திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## படகுகள் ஒலுவில் கடற்பரப்பில் தஞ்சம்

பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக பழுதடைந்த கிழக்கு கடற்கரையில் படகினை ஒலுவில் துறைமுகத்திற்கு உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படகை நங்கூரமிட்டு நிறுத்தி வைப்பதற்கான சாதக தன்மைகள் தொடர்பில் ஒலுவில் துறைமுகம் தயாராக உள்ளதாக அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்தார்.

இதுவரையில் ஒழுவில் துறைமுகத்தில் 150 படகுகள் வரையில் நங்கூரமிட்டுள்ளன.

அப்படகுகளிற்கு தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு கடற்படை தயாராகவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

### கஹவத்தை:

# முன்னைய கொலைகளுடன் தொடர்பு: பொலிஸ் சந்தேகம்

இரத்தினபுரி - கஹவத்தை - வராபிட்டி பகுதியில் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் முன்னர் இடம்பெற்ற கொலைகளுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபருக்கு தொடர்பு இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வராபிட்டி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 60 வயது பெண் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொட்டகெத்தேன பகுதியில் இரு பெண்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நபருக்கு இக்கொலையுடன் தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து பொலிஸ் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பர்

புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷிடிற்கும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. ஈரான், இலங்கை, ஓமான், கென்யா, மடகஸ்கர் மற்றும் ஷிசில்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் விசேட சந்திப்புக்களை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு துரித கதியில் அதிகாரப் பகிர்வு யோசனைத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, யுத்த நிறைவின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கஹவத்தையில் மீண்டும் ஒரு பெண் கொலை

கஹாவத்தை பிரதேசத்தில் மற்றுமொரு பெண் கொலை செய்யப்பட்டுள்ளார். கஹாவத்தை வராபிட்டிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 60 வயதான பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். குறித்த பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தாக்குதலில் படுகாயமடைந்திருந்த குறித்த பெண்ணை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளில் கஹாவத்தை பிரதேசத்தில் கொலை செய்யப்பட்ட 15ஆவது பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதல்வருடன் குறித்த பெண் பல ஆண்டுகளாக குறித்த வீட்டில் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. புதல் வர் வேலை முடித்து வீடு திரும்பிய போது தோட்டத்தில் படுகாயமடைந்த நிலையில் குறித்த பெண் விழுந்து கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாதம்
Thamil Naatham

நவம்பர் மாதம் 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## ஜெனீவா கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள்

ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் உலகளாவிய பருவகால மீளாய்வுக் கூட்டம் நேற்று ஜெனீவாவில் ஆரம்பமாகியது. இங்கு இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விமர்சனங்கள் சில அங்கத்துவ நாடுகளால் முன்வைக்கப்பட்டன. சுமார் 99 நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்துக் கருத்துக்களை முன்வைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் ஐந்தாம் திகதி இலங்கை பற்றிய இறுதி மதிப்பீடு முன்வைக்கப்படவிருக்கிறது. இந்த மதிப்பீடுகளை நேற்று ஆரம்பமான பருவகால கூட்டத்தொடருக்கு தலைமை தாங்குகின்ற இந்தியா, பெனின், ஸ்பெய்ன் ஆகிய மூன்று நாடுகளும் முன்வைக்கவுள்ளன. இந்த மூன்று நாடுகளுமே கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான குற்றப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்த நாடுகளாகும்.

கடந்த மார்ச்சில் இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் என குற்றஞ்சாட்டும் பிரேரணையை அமெரிக்காவே முன்வைத்தது. ஒன்பது வாக்குகள் மேலதிகமாகப் பெற்று இந்தத் தீர்மானம் நிறைவேறியது. இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 24 நாடுகளும், எதிராகப் 15 நாடுகளும் வாக்களித்திருந்தன. எட்டு நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றாமல் நடுநிலை வகித்தன. ஐ.நா.பாதுகாப்புப் பேரவையில் நிரந்தர அங்கத்துவ நாடுகளான சீனாவும், ரஷ்யாவும் எதிர்த்து வாக்களித்தன.

இந்தியா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமை பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குறிப்பாக நாடொன்றினைக் குறிப்பிட்டு கொண்டுவரப்படும் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிப்பதைத் தவிர்த்து வந்த ஒரு நாடு. இலங்கையின் அண்டை நாடு மட்டுமல்ல. அண்மைக் காலமாக இலங்கையோடு நல்லுறவுகளைப் பேணி வந்த நாடும் இந்தியாதான். எனவேதான் அமெரிக்கப் பிரேரணையை இந்தியா ஆதரித்தமை இலங்கையை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இருந்தாலும் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்துக்கு இறுதி நேரத்தில் சில திருத்தங்களை முன்வைத்த பின்னரே அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

"இலங்கையோடு கலந்தாலோசித்து, இலங்கையின் இணக்கத்தோடு" என்ற வார்த்தைப் பிரயோகங்கள் இந்தியாவின் ஆலோசனையின் பேரில் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டன. இதன்படி மனித உரிமைகள் தொடர்பான தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஆலோசனைகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா.மனித உரிமைப் பேரவை வழங்கும்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களே இடம்பெறவில்லையென்று வாதிடுவதில் அர்த்தமில்லை. யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளுமே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருக்கின்றன. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதற்காகப் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு. அரசுக்கு எதிராக ஆயுதமேந்தியவர்களை அழிக்கும் உரிமை ஆயுதப் படைகளுக்கு உண்டு என்று வசனம் பேசமுடியாது. அமெரிக்கா இன்றுவரை மற்ற நாடுகளில் ஆக்கிரமிப்புகளை மேற்கொண்ட ஒரு நாடு.

வியட்நாம், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இலட்சோப இலட்சம் அப்பாவி மக்களைக் கொன்று குவித்த நாடு அமெரிக்கா. பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்து, இஸ்ரேல் நடத்திய அனைத்து அக்கிரமங்களுக்கும் துணை போன நாடு அமெரிக்கா. இஸ்ரேலுக்கு எதிராகச் சின்னி விரலைக்கூட அசைக்க மறுத்த நாடும் அமெரிக்கா. குற்றவாளிகளே நீதிபதிகளாகும் கடைகெட்ட தந்திரோபாயம் இது.

இருந்தாலும் கடந்த முப்பது வருட கால யுத்தத்தில் குறிப்பாக வன்னிக்குள் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்பாவி மக்களின் உயிர்களோடும் வாழ்வோடும் விளையாடிய மனித மிருகங்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் நியமித்த "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு"வின் அறிக்கை பல காத்திரமான யோசனைகளை முன்வைத்திருக்கிறது. அத்துடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்குமான தேசிய நடவடிக்கைத் திட்டமொன்றினையும் அரசாங்கம் முன்வைத்துள்ளது. இவற்றினூடாக உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்கு அதிக விலை கொடுத்தவர்கள் யுத்தத்தோடு எந்த வகையிலும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களே. மனிதநேயம் மௌனித்ததால் ஆயுதங்கள் பேசிய கொடூரம் இது. முரண்பாட்டுத் தீர்வு என்பதற்கு நேர்மையான அணுகுமுறையும், அர்ப்பண சிந்தையும், நெகிழ்ச்சித் தன்மையும் தேவை. அதற்கு முன்னோடியாக மனித உரிமைகள் பேணப்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# ஆசியா பவுண்டேசனின் சிட்டிசன் ரிபோர்ட் கார்ட் ஊழல் மோசடிகளைத் தடுக்க உதவுமா?




அரசாங்கம் என்பது ஜனநாயக ரீதியாக மக்களினால் தெரிவு செய்யப்படும் ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பிலுள்ள உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகளாக காணப்படுவர். இந்த அமைப்பு பல மட்டங்களில் காணப்படுகின்றன. அதாவது மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்ற ரீதியில் காணப்படும். அடிமட்ட அமைப்பான உள்ளூராட்சி மன்றங்களினுள் மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் உள்ளடங்குகின்றன.

இந்த அனைத்து அமைப்புக்களும் மக்களுக்குத் தேவையான சேவைகளை மேற்கொள்வதற்காகவே ஸ்தாபிக்கப்படுகின்றன. இதன் ஊடாக பொதுமக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு, கல்வி, மின்சாரம், வீடமைப்பு மற்றும் சுகாதாரம் போன்ற பல சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்தச் சேவைகள் அனைத்தும் மக்கள் பிரதிநிதிகளாகச் செயற்படும் ஆட்சியா-ளர்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் மக்களின் பங்குபற்றல் மிக குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இந்தச் சேவைகளை மேற்கொள்ளும் போது பொறுப்புடமை என்பது குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

அனைத்து வகையான பொதுச் சேவைகளிற்கும் தேவையான நிதியினை பொதுமக்கள் வரி என்ற பொறிமுறையில் நேரடியாகவும் மறைமுகமாவும் வழங்குகின்றனர்.

இந்த வரியே அனைத்து வகையான அரசாங்கங்களினதும் பிரதான வருமானமாகும். எனினும் பொதுமக்களின் நிதியின் ஊடாக ஆட்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து சேவைகளிலும் பொறுப்புடமை பேணப்படுவதில்லை. அதாவது மக்களின் பணம் மக்களுக்கு எவ்வாறு செலவு செய்யடுகின்றது என்பதை மக்களுக்கு காட்டுவதே பொறுப்புடமை என இங்கு குறிப்பிடப்படுகின்றது.

இதன் மூலம் பொதுமக்கள் தங்களின் பணத்தினை தங்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் எவ்வாறு செலவு செய்கின்றன என்பதை அறிய முடியும். சேவைகளை அரசாங்கள் மேற்கொள்ளும் போது ஏதாவது ஊழல்கள் இடம்பெறுகின்றனவா என்பதை அறிய முடியும்.

அத்துடன் குறித்த சேவையில் பொதுமக்களுக்கு திருப்தி இல்லாவிடின் தங்களின் கருத்துக்களை தெரிவித்து சேவைகளை சிறந்த முறையில் பெற முடியும். இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக அரசாங்கங்களின் செயற்பாடுகளில் மக்களும் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

எனினும் அரசாங்கங்கள் இவ்வாறு மக்களுடன் இணைந்து செயற்படுவது மிக குறைவாகும். இதன் காரணமாக பொறுப்புடமை பேணப்படுவதில்லை. எவ்வாறாயினும் மக்களின் பங்குபற்றுதலுடனான பொறுப்புடமை செயற்பாட்டை மிக இலகுவில் நாடு முழுவதும் அறிமுகம் செய்வது சுலபமான காரியமல்ல. எனினும் இது இலங்கையில் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

அதாவதுச் சந்தை கட்டிட தொகுதியின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட வாகனத்தை எடுப்பதற்காக இரவு நேரத்தில் செல்லும் போது 100,000 ரூபா பணத்தை காண்கிறீர்கள். குறித்த பணத்தை நீங்கள் எடுப்பதை யாராலும் அவதானிக்க முடியாது. அப்படியிருந்தால் பெரும்பான்மையானவர்கள் குறித்த பணத்தினை இரகசியமாக எடுப்பார்கள். அதேவேளை, குறித்த வாகன தரிப்பிடத்தில் வீடியோ கமெரா பொருத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்தால் அனைவரும் குறித்த பணத்தை உரிய அதிகாரிகளிடம் கொடுத்து பாராட்டை பெறவே முயல்வர்.

இதனை ஒத்த செயற்பாடுகளே இலங்கையிலுள்ள அரச நிறுங்களில் இடம்பெறுகின்றனர். குறித்த ஒரு செயற்பாட்டில் பொதுமக்கள் அவதானமாக இருந்தால் ஊழல் மோசடிகள் இடம்பெறாமல் இருக்கும். அதேநேரம் பொதுமக்களின் பங்குபற்றல் குறைவாக காணப்படின் ஊழல் மோசடிகள் அதிகம் இடம்பெறும்.

### சிட்டிசன் ரிபோர்ட் கார்ட்

இதற்காக ஆசியா பவுண்டேசன் புதிய செயற்றிட்டமொன்றை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. சிட்டிசன் றிபோர்ட் கார்ட் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பிரஜைகள் அறிக்கை அட்டை செயற் திட்டத்தினையே முதன் முதலில் ஆசியா பவுண்டேசன் இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது.

இந்தத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் ஒரே நேரத்தில் அறிமுகம் செய்வது இலேசான விடயமல்ல எனவே உள்ளூர் மட்டங்களிலுள்ள ஜனநாயக ரீதியான அரச நிறுவனங்களான உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து ஆசியா பவுண்டேசன் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய நுவரெலியா மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் இந்தச் 'சிட்டிசன் றிபோர்ட் கார்ட்' திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அறிக்கை கடந்த மாதம் ஆசியா பவுண்டேசனினால் வெளியிடப்பட்டடுள்ளது.

இந்த அறிக்கை ஆசியா பவுண்டேசன் நிதியுதவியுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக கொள்கை ஆய்விற்கான அறிக்கை நிலையம் மற்றும் சிறப்பு தன்மையான இந்திய பிராக் பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூரிலுள்ள உள்நாட்டலுவல்கள் நிலையம் ஆகியவற்றின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது.

சிட்டிசன் றிபோர்ட் கார்ட் பரவலாக அனைவராலும் ஏற்கப்பட்ட ஒரு சமூக பொறுப்புடமை கருவியாகும். இந்த செயற்றிட்டம் முதன் முதலில் 1991ஆம் ஆண்டு இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை ஒத்த அமைப்பாகிய பெங்களூர் உள்ளூராட்சி மன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய ஊழல் மோசடிகளை சிட்டிசன் றிபோர்ட் கார்ட் செயற்றிட்டத்தின் ஊடாக குறைக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்தே ஆசியா பவுண்டேசன் இலங்கையில் இந்த சிடிசன் றிபோர்ட் கார்ட் அறிக்கையினை அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிக்கையின் மூலம் அரச நிறுவனங்களின் தரம் மற்றும் எண்ணிக்கை ரீதியிலான முன்னேற்றங்களின் பின்னூட்டலை அறிவதற்கான சாதனமாகும்.

இந்த அறிக்கை இலகுவில் தயாரிக்கப்படும் ஒன்றல்ல. இதற்காக வேண்டி ஆசியா பவுண்டேசன் பல மில்லியன் ரூபா பணத்தினை செலவளித்துள்ளது. அத்துடன் இந்த அறிக்கை தயாரிப்பிற்கு பல மாதங்கள் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது பயன்பாட்டாளர்களான பொதுமக்களின் கருத்துக்கள், அனுபவம், அரச சேவையர்களின் கருத்துக்கள், அரசியல்வாதிகளின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்களை வைத்து தயாரிக்கப்படுகின்றது. இந்த அறிக்கையின் மூலம் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் கொள்கைகள், தந்திரோபாயங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் மக்களுக்கு மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை ஆராய்கின்றன.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

# கலாநிதி பட்டம் மோசடியானதா? அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

மோசடியான வகையில் பெறப்பட்டதாக கூறப்படும் கலாநிதி பட்டம் பற்றிய அறிக்கையை கொழும்பு குற்றவியல் பிரிவு எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முஹம்மட் கௌஸ் சுலைமான் சூபிக் என்பவர் போலி கலாநிதி பட்டத்தை பயன்படுத்துவதாக கொழும்பு குற்றவியல் பிரிவு ஓர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. முஹம்மட் கௌஸ் சுலைமான் சூபிக் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரரை பழிவாங்க பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்ததாக கூறினார்.

"புறக்கோட்டை பகுதியில் தனது கட்சிக்காரர் வியாபாரம் செய்துகொண்டிருந்த பகுதி பாதாள உலகத்தை சேர்ந்த ஒருவரிடமிருந்தே முன்னாள் உரிமையாளர் வாங்கியுள்ளார் என்றும் இதை கட்சிக்காரர் பல உயர் இடங்களில் முறைப்பாடு செய்தார். இதை விரும்பாத பொலிஸார் இவர் மீது போலியான வழக்கை சோடித்துள்ளதாக" சட்டத்தரணி குறிப்பிட்டார்.

"தனது கட்சிக்காரருக்கு கொழும்பில் நடந்த ஒரு விழாவில் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. இந்த விழாவில் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்த முதல் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷவிற்கும் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது" எனக் கூறிய சட்டத்தரணி, பட்டம் வழங்கிய விழாவில் எடுக்கப்பட்ட படங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

போலி கலாநிதி பட்டம் வழங்கியிருந்தால் பட்டம் வழங்கியவரை தண்டிக்க வேண்டுமே தவிர பட்டத்தை பெற்றவரைத் தண்டிக்கக் கூடாது என சட்டத்தரணி நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

# சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக்குழு குற்றப் பிரேரணை குறித்து கூடி ஆராய்ந்தது

புரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிராக குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்ற நிலையிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு நேற்றைய தினம் அவசரமாகக் கூடியது.

இந்த நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது,

தற்போதைய நிலைமைகள் மற்றும் நேரத்தை ஒதுக்குமாறு ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

# இறைவரி மோசடி நிறுவன பணிப்பாளருக்கு விளக்கமறியல்

இறைவரி உத்தியோகஸ்தர்கள் இருவரின் உதவியுடன் வரிப் பதிவேடுகளிலிருந்து தனது நிறுவனம் தொடர்பான தகவல்களை அழித்து விடுவதற்கு சதி செய்த நிறுவனமொன்றின் பணிப்பாளர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு, கோட்டை நீதவான் புதன்கிழமை உத்தரவிட்டார்.

ஏழு நிறுவனங்களின் பதிவேடுகளை அழித்துவிட்டதால் வரி வருமானமாக கிடைக்கவேண்டிய 184 மில்லியன் ரூபாவை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இறைவரித் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் இருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்த வாரம் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே நிறுவனமொன்றின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டார். கைதான சந்தேகநபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவை இலங்கை பற்றிய ஆய்வு

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த விவாதம் இடம்பெற்று வருகின்றது. புலிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தோற்கடிக்கப்பட்ட போதிலும் - இலங்கையின் மனித உரிமைகள் நிலை மோசமாகவே இருப்பதாக மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.



யுனிவர்சல் பிரியாடிக் ரெவ்யூ என்ற பொறிமுறையின் கீழ் ஐ நா மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 192 உறுப்பு நாடுகளின் மனித உரிமை சூழ் நிலைகளும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய் யப்படுகிறது.

மனித உரிமைகளை மேம்படுத்தவும், மனித உரிமை தொடர்பான கடப்பாடுகளை பின்பற்றவும் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை விளக்க ஒவ்வொரு நாட்டுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் மனித உரிமை நிலை மீளாய்வு செய்யப்பட்ட போது போர் உச்சகட்டத்தில் இருந்தது. அந்தப் போரின் போது இலங்கை இராணுவம் போர் குற்றங்களைப் புரிந்த்தாகக் கூறப்படுவது தொடர்பாகவும், போரின் போது பலர் ஒரே சமயம் கொல்லப்பட்டது உட்பட இதுவரை விசாரிக்கப்படாத பல அத்து மீறல்கள் தொடர்பாகவும் இலங்கை அரசு முன்னேற்றங்களைக் காணவில்லை என்று மனித உரிமை கள் கண்காணிப்பகம், ஹியுமன் ரைட்ஸ் வாட்ச், அம்னெஸ்ட்டி இன் ரநஷனல் போன்ற அமைப்புக்கள் கூறுகின்றன.

போர் முடிந்த பிறகு கூட அரசு சித்திரவதையை கைக்கொள்வதாகவும், ஆட்கள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு காணமல் போவது தொடர்வதாகவும், பத்திரிகையாளர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தல்களை தொடர்ந்து சந்திப் பதாகவும் அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் உட்பட பல அதிகாரங்கள் தற்போது ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தனக்கு எதிராக கூறப்படும் மனித உரிமை மீறல்களை தாம் எதிர்கொண்டு வருவதாகக் கூறும் இலங்கை அரசு, இம்முறை தாம் அதிக நாடுகளின் ஆதரவைப் பெற முடியும் என்ற நம்பிக்கையை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது..

# இணையத்தள மோசடி சந்தேகத்தில் நால்வர் கைது

விளம்பர இணையத்தளமொன்றில் உறுப்பினராக சேர்த்துக் கொள்வதாகக் கூறி லட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிலியந்தலை பொலிஸாரால் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். உலகளாவிய ரீதியில் சுமார் 125 நாடுகளில் அங்கத்தவர்கள் இருப்பதாகக் கூறி, சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான பணத்தை இவர்கள் மோசடி செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரும் கொட்டாவை மற்றும் பன்னிபிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் மேற்படி இணையத்தளத்தில் விளம்பரங்களைப் பார்வையிடுவதற்காக குறிப்பிட்ட தொகை பணம் தரகாக வழங்கப்படும் என்றும் அதற்கான உறுப்புரிமையைப் பெறுவதற்கு 500 அமெரிக்க டொலர்கள் (66,000 ரூபா) செலுத்தப்பட வேண்டும் என்று கூறியே மேற்படி நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

தங்களுக்கு உறுதிசெய்யப்பட்ட தரகுப் பணம் மாத்திரமின்றி தாங்கள் செலுத்திய உறுப்புரிமைப் பணம் கூட தங்களுக்கு கிடைக்கவில்லை என யுவதிகள் 15பேர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார், குறித்த சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்து தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

# அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

ஊழியர் சேமலாப நிதி முதலீடு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரணைக்கு ஏற்பதற்கான ஆதாரங்களை டிசெம்பர் 31ஆம் திகதி மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் புதன்கிழமை அறிவித்தது.

ஊழியர் சேமலாப நிதியம் வெளிப்படைத் தன்மையின்றி உறுதிப்பாடு இல்லாத நிறுவனங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் முதலீடு செய்துள்ளதாக குற்றஞ்சாட்டி 11 தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு அறிவித்தது.

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர்களான கே.ஸ்ரீபவான், அமரதுங்க ஆகியோர் இந்த மனுவை ஆராய்ந்த போதே ஆதாரங்களைக் காட்டுவதற்கான திகதியை நிர்ணயித்தனர்.

தவறான முதலீடுகள் மற்றும் பங்குச்சந்தை மோசடி தொடர்பில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் மீது குற்றப்புலனாய்வு செய்ய வேண்டும் என சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் பணிக்க வேண்டும் என அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.



1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். இந்நிகழ்வின் 22ஆவது வருடத்தை நினைவுகூருமுகமாகயாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ்- கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் ஒழுங்கு செய்த பொதுகூட்டத்தில் பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புள்ளா, இரா. செல்வவடிவேல் உரையாற்றுகின்றார். (மீரான்)

# இயற்கைப் பேரழிவும்

## இடர்பாடுகளுள் சிக்கும் மனித வாழ்வும்

இயற்கைப் பேரழிவு (Natural disaster) அல்லது பெருங்கேடு என்பது இயற்கையாக நிகழும் இடையூறுகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறிப்பதாகும். (எடுத்துக் காட்டாக, வெள்ளப் பெருக்கு, எரிமலை வெடிப்பு, நில நடுக்கம், மண்சரிவு போன்றவை), இந்தப் பேரழிவால் மிகையான அளவில் பொருட்சேதம், உயிர்ச்சேதம், ஏற்படுவதுடன் சுற்றுச்சூழலும் விவரிக்க இயலாத அளவிற்கு சேதமடைகிறது. இதனால் ஏற்படும் பெரும் நட்டத்தை தாங்கிக் கொள்வது சுலபமல்ல, அதன் சுவடுகள் வாழ்நாள் முழுதும் பாதிப்படைந்தவர்களை துன்பத்திலும், துயரத்திலும் ஆழ்த்தினாலும், ஒரு வகையில் இந்தக் கட்ட நட்டங்களைத் தாங்கி மீள்வதற்கான செயல்பாடுகளை அந்நாட்டு மக்களும் சமூகமும் எடுக்கும் விரைவான நடவடிக்கைகளை மிகவும் சார்ந்தே, சுற்றுப்புற சூழ் நிலைகளை பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கான மிகச் சிறந்த, தெளிவான வழியாகும். அது மட்டுமன்றி, பேரழிவில் இருந்து மீண்டும் எழுவதற்கும், அதைத் துணிந்து போராடுவதற்கும், மக்கள் தன்னம்பிக்கையுடன் அதைப்புச்சத்தியுடன் துணிந்து செயல்படுவது மிகவும் முக்கியமாகும். மக்களின் ஆதரவு, அவர்கள் திறமையுடனும் விரைவாகவும் எடுக்கும் ஆக்கபூர்வமான செயல்பாடுகள், பதட்டப்படாமல் ஒற்றுமையுடன் செயல்படுதல், நேரம் காலம் பாராமல் அனைவரும் தமது பங்கை அளித்து சிரமங்களைப் பாராமல் செயல்படுவதால் நிலைமையை ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள சாத்தியமாகும், மேலும் நட்டங்களையும், பாதிப்புகளையும், ஓரளவிற்கு குறைக்கவும் வழி செய்யலாம் நாம் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படையான கூற்று இதுவேயாகும்: "காற்றானது சீற்றமடைந்து ஆல மரத்தையே வேரோடு சாய்ப்பது போலவே, அளவு கடந்த இடர்பாடுகள் ஒரே நேரத்தில் தொடர்ச்சியாக நிகழும் பொழுது, அதுவே பேரழிவாக ஊறுபட்டு பேரழிவுகளுக்கு வித்திடுகிறது இயற்கையாக எழும் இடர்பாடுகள் சில பாதிப்படையக் கூடிய இடங்களில் மிகையாக நிகழும் போது மட்டுமே பேரழிவிற்கு வழி வகுப்பதாகக் காணப்படுகிறது, இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடுவது என்னவென்றால், மக்கள் வசிக்காத இடங்களில் கடுமையான நில நடுக்கம் ஏற்படுவதில்லை. இவ்விடத்தில் இயற்கை என்ற சொல்லே பிற்பாடு விவாதத்திற்குரியதாக உள்ளது, ஏன் என்றால் அழிவுச் சம்பவங்கள், இடையூறுகள் அல்லது இடர்ப்பாடுகள் அனைத்துமே மனிதர்கள் சம்பந்தப் பட்டு இருந்தால் மட்டுமே அர்த்தமுடையதாயிருக்கும், என்ற விவாதமே சொல்லப் போனால், மக்கள் வசிக்காத இடங்களில் நடைபெறும் சம்பவங்களைக் குறித்து மனிதர்கள் தெரிந்து கொள்ளாமலும், அக்கறை காட்டாமலும் இருக்கலாம்.

ஓர் இயற்கை இடையூறு என்பது, அதைச் சார்ந்த மக்களையும், சுற்றுச் சூழலையும் எதிர்மறை விளைவுகளுடன் பாதிக்கும் தன்மையுடைய அபாயங்களை அல்லது அச்சுறுத்தல்களைக் குறிக்கும் ஒரு நிகழ்வாகும். பல இயற்கையான இடையூறுகள் ஒன்றுடன் ஒன்று என தொடர்பு கொண்டவையாகும், உதாரணமாக, நில நடுக்கம் காரணமாக சுனாமி உருவாகலாம், வறட்சியின் விளைவாக நேரடியாக பஞ்சம்'பஞ்சமும் அதனுடனேயே சேர்ந்து கொள்ளை நோய்'கொள்ளை நோயும் தொற்றலாம். 1906 ஆம் ஆண்டில் ஸான் பிரான்ஸிஸ்கோவில் நிகழ்ந்த நில நடுக்கம் ஓர் பேரழிவாகும், ஆனால் பொதுவாக நடைபெறும் நில நடுக்கங்கள் இடையூறாக அமைவதே பேரழிவிற்கும் இடர்பாட்டிற்கும் இடையே நிலவும் பாகுபாட்டை விளக்கும் ஒரு வலுவான எடுத்துக்காட்டாகும். இடையூறுகள் பிற்பாடு வரப்போகும் எதிர்கால நிகழ்ச்சிகளோடு தொடர்பு கொண்டிருக்கும், பேரழிவுகள் கடந்த காலத்துச் சம்பவங்கள் அல்லது நடப்புச் சம்பவங்களோடு தொடர்பு கொண்டிருக்கும்.

யூட்டா மாநிலத்து கிழக்கு டிம்பநோகோஎஸ் மலை பனிச்சரிவு, அஸ்பென் க்ரோவ் சுவடுகள்.

குறிப்பிடத்தகுந்த பனிப்பாறை சரிவுகள் பின்வருவன வாகும்.

**1910 ஆம் ஆண்டு வேல்லிங்க்டன் பனிப்பாறை சரிவு**
**1954 ஆம் ஆண்டு ப்லோன்ஸ் பனிப்பாறை சரிவு**
**1970 ஆம் ஆண்டு ஆன்கா' நிலநடுக்கம்**
**1999 ஆம் ஆண்டு கால்டுர் பனிப்பாறை சரிவு**
**2002 ஆம் ஆண்டு கொல்கா-கர்மடோன் பாறை பனி சரிவு.**

### நில நடுக்கங்கள்

புவி ஓட்டில் திடுமென எதிர்பாராமல் ஏற்படுகின்ற அசைவே நில நடுக்கமாகும். அதன் அலைஅதிர்வுகள் பரும அளவில் மாறுபடும். நில நடுக்கத்திற்கு காரணமாக அமைந்த நிலத்தின் அடியிலான (கீழான) பிறப்பிடத்தினை குவியம்" என்றழைப்பர். அந்த குவியத்தின் நேர் மேலுள்ள முனையினை "அதிர் மையம்" என்றழைப்பர். அவ்வாறு நில நடுக்கங்கள் ஏற்படும் பொழுது மக்களையோ அல்லது விலங்குகளையோ அது பாதிப்பதில்லை. நில நடுக்கத்தின் காரணமாக, இரண்டாம் பட்ச நிகழ்வுகளான கட்டிடங்கள் பாழடைந்துச் சரிதல், காட்டுத்தீ பரவுதல், சுனாமி உருவாகுதல், எரிமலை வெடித்தல் போன்ற நிகவுகளின் பின்னணியில் மக்களுக்கு பேரழிவுகளுடன் பேரிழப்பும் நேரிடுகிறது. பலமான கட்டிடங்களைக் கட்டுவது, சிறப்பான பாதுகாப்பு முறைகளை செயல் படுத்துவது, ஆரம்ப காலத்திலேயே எச்சரிக்கை செய்வது, முன்னதாகவே மக்களை இடம் பெயருவதற்கான முன்னேற்பாடுகளை திட்டமிட்டு செயல் படுத்துவது, ஆகிய சீரான நடவடிக்கைகள் மூலம் இது போன்ற பேரழிவு இடர்பாடுகளில் இருந்து ஓரளவிற்கு தடுக்கவோ அல்லது தவிற்கவோ முனையலாம். எனவே இயற்கை யல்லாத பேரழிவு என்ற கூற்று சட்டப்படி வாத ஆதாரமற்ற ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றாகும்.

நிலவியல் குறைபாடுகள் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் குவிந்து விட, அவை யாவற்றையும் ஒரே நேரத்தில் உடனுக்குடன் வெளியேற்றும் இயற்கை நிகழ்வுகளால் நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன.

**சமீப காலங்களில் நிகழ்ந்த மிகக் குறிப்பிடத் தக்க நில நடுக்கங்களாவன:**

2004 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம் வரலாற்றில் இரண்டாம் மிகப்பெரிய நிலநடுக்கமாக, குறித்த தருணத்தில் 9.3 என்ற அளவில் பதிவானது. இந்த நிலநடுக்கம் தூண்டிவிட்ட பெரும் சுனாமி ஆழிப் பேரலை காரணமாக 229,000 க்கும் மேற்பட்ட மக்கள் மரணமடைந்தார்கள்.

2005 ஆம் ஆண்டு கா'மீர் நில நடுக்கம், அதன் அளவு 7.6-7.7 என்றிருக்க, பாகிஸ்தானில் 79,000 பேர்கள் அகால மரணமடைந்தார்கள்.

7.7 பருமனளவு கொண்ட ஜுலை 2006 ஆம் ஆண்டு ஜாவா நில நடுக்கம் சுனாமி ஆழிப் பேரலைகளை முடுக்கிவிட்டது.

அதேபோல் 7.9 பருமனளவில் மே 27, 2008 அன்று சிசுவான் நில நடுக்கம் சீனாவில் சிசுவான் பிரதேசத்தில் நிகழ்ந்தது. மே 27, 2008 அன்று 61,150க்கும் மேற்பட்டவர்கள் மாண்டார்கள்.

இவை கலிபோர்னியா பகுதிகளில் கனமழை பெய்து முடிந்த காலத்தில் தவறாமல் அடிக்கடி நிகழ்பவையாகும்.

### எரிமலை வெடித்துச் சிதறுதல்

எரிமலை வெடித்துச் சிதறும் நிகழ்வே பேரழிவாகலாம், அல்லது அக்கினிப் (தீப்பாறைகள்) பாறைகள் வீழ்வதும் பேரழிவாக உள்ளது. அப்படி மிகையானவை வெடித்துச் சிதறியதும் பற்பல விளைவுகள் தோன்றிட அது மானிட வாழ்க்கைக்கு ஊறு பயக்கின்றது.

ஒரு எரிமலை வெடித்து பேரழிவாக சிதறும் போது "லாவா"தீக்குழம்பு வெளிப்படும். அதில் மிகையான வெப்பத்துடன் கூடிய உள்ளிருக்கும் பாறைகளும் இருக்கும். அதனுள் பல்வேறு வேறுபட்ட வடிவங்கள் மென்மைத் துகளாகவும், பிசு பிசுப்பாகவும் இருக்கும். இது எரிமலையில் இருந்து சிதறும் போது எதிரில் காணும் கட்டடங்கள் மற்றும் தாவரங்கள் எல்லாவற்றையும் பொசுக்கி அழித்து விடும்.

எரிமலை சாம்பல் - என பொதுவாக பொருள்படுவது-குளிர்ந்தபடி சாம்பல் மேகமாக வடிவு எடுக்கும், அருகிலுள்ள பகுதிகளில் அடர்ந்து தங்கிவிடும். நீருடன் கலந்தவுடன் "திண்காறை" போல ஒரு கட்டியான பொருளாகி விடும். போதுமான அளவில் இத்தகைய சாம்பல் அதன் எடையால் மேல் கூரையையே நொறுக்கிவிடும். சிறிதளவு சுவாசித்தாலே போதும், உடல் ஆரோக்கியத்தை முழுமையாக பாதித்து விடும். அந்த சாம்பலில் பொடித்த கண்ணாடித்தூள் கலந்து உள்ளதால் எஞ்சின் போல அசையும் உள்பகுதிகள் உராய்ந்து பாதிப்படையும்.

### உன்னதஅக்கினி மலைகள்:

டோபா பேரழிவு கோட்பாட்டின் படி 70 முதல் 75 ஆயிரம் வருடங்கள் முன்னர் டோபா ஏரியில் நிகழ்ந்த உன்னத எரிமலை சீற்றம் காரணமாக மக்கள் தொகை பத்தாயிரம் மக்கள் அல்லது ஆயிரம் உற்பத்தி ஜோடிகள் என்று குறுகியதால் மனித படிமலர்ச்சியில் ஒரு இக்கட்டான நிலை உருவானது. அது வட கோளரங்கத்திலுள்ள முக்கால் வாசி அளவு தாவர இனங்களையும் அழித்தது. உன்னத அக்கினி மலை கக்கும் சாம்பல் அதிவிரைவாக கார்மேகம் போல் படர்ந்து உலகெங்கும் தட்ப வெப்ப சீதோ'ண நிலையில் பல நூற்றாண்டுகளுக்கு பாதிக்கும் தன்மை கொண்டதாகும்.

பழம் பாறைகளின் துண்டுகளிலிருந்து ஒழுகும் உ''ண ஊற்றுகளில் நிரம்பி உள்ளதெல்லாம் வெப்ப எரி-மலையின் சாம்பலாகும். அது வாயு மண்டலத்தில் ஊடுருவி பரவி தன்னுடைய எடை, ஆற்றொழுக்கு இரண்டாலும் விரிவடைந்து போகும் பாதையில் எதிர்கொள்ளும் பொருட்கள் யாவையும் எரித்துத் தள்ளுகிறது. ஒரு எரிமலைத் துண்டின் உ''ண ஊற்று ஒழுக்கே, பாம்பெய் முற்றிலுமாக சீரழிந்து போனதற்கு முக்கிய காரணம் என்று நம்புகிறார்கள்.

## வெள்ளத்தால் பேரிழப்பு

### பெரு வெள்ளம்

வரலாற்றுப் பதிவுகளில் இடம் பெற்ற மக்களை வெகுவாக பாதித்த ஒரு சில மிக குறிப்பிடத் தக்க வெள்ளங்கள் ஆவன:

"ஹவாங் ஹ என வழங்கும் சீனாவின் புகழ் பெற்ற



21.வேள்வித் தீ எனும் நாடகம் எப்பிரச்சினை சார்ந்தது?
1.கல்விப் பிரச்சினை 2.இனப்பிரச்சினை 3.குடும்பப் பிரச்சினை 4.உளப்பிரச்சினை

22.ஈழத்து சிறுவர் அரங்கின் முன்னோடி
1.குழந்தை ம. சண்முகலிங்கம் 2.பேரா. சி. மௌனகுரு 3.கோகிலா மகேந்திரன் 4.சி. ஜெய்சங்கர்

23.பின்வருவோரில் தெருவெளி அரங்கில் குறிப்பிடத்தக்கவர்
1.வீ.எம்.குகராஜா 2.நா.சுந்தரலிங்கம் 3.இ.முருகையன் 4.அ. தாஸிஸியஸ்

24.நாடகத்தை எழுதுபவர்
1.நாடகாசிரியர் 2.நெறியாளர் 3.இசையமைப்பாளர் 4.காட்சியமைப்பாளர்

25.மண்சுமந்த மேனியர் எனும் நாடகம் நிகழ்த்தப்பட்ட ஆண்டு
1.1984 2.1985 3.1986 4.1987

26.தப்பு எனும் வாத்தியம் பிரதானமாக பயன்படும் கூத்து
1.வடமோடி 2.தென்மோடி 3.காமன்கூத்து 4.பறைமேளக் கூத்து

27.வேடமுகம் என்பது
1.பாத்திரத்தின் இயல்பை காட்ட 2.நடிகரை அழகுபடுத்த 3.விகாரப்படுத்த 4.சிரிப்பூட்ட

28.நாடக பிரதியினை தெரிவு செய்பவர்
1.நெறியாளர் 2.தயாரிப்பாளர் 3.நடிகர் 4.இசையமைப்பாளர்

29.சிந்துநடைக் கூத்து ஆடப்படும் பிரதேசம்
1.யாழ்ப்பாணம் 2.மட்டக்களப்பு 3.மன்னார் 4.மலையகம்

30."பாஸ்க்" சிறப்பாக நிகழ்த்தப்படும் இடம்
1.பேசாலை 2.யாழ்ப்பாணம் 3.வன்னி 4.வவுனியா

31.அண்டவெளி எனும் நாடகத்தின் நெறியாளர்
1.க. ரதிதரன் 2.இ. முருகையன் 3.க.சிதம்பரநாதன் 4.நா.சுந்தரலிங்கம்

32.சிங்கள மக்களது தேசிய நடனமாக கருதப்படுவது
1.பரதம் 2.கோலம் 3.சொக்கரி 4.கண்டிய நடனம்

33.ஆற்றுகை எனும் நாடக சஞ்சிகையினை வெளியிடும் நிறுவனம்
1.செயல்திறன் அரங்க இயக்கம் 2.வெறுவெளி அரங்கக் குழு
3.திருமறைக் கலாமன்றம் 4.புத்தாக்க அரங்க இயக்கம்

34."பண்பும் பயனும்" நாடகத்தின் ஆசிரியர்
1.நா. சுந்தரலிங்கம் 2.குழந்தை ம. சண்முகலிங்கம் 3.இ. சிவானந்தன் 4.சி. மௌனகுரு

35.மண்சுமந்த மேனியர் எனும் நாடகத்திளன் நெறியாளர்
1.க. சிதம்பரநாதன் 2.க. ரதிதரன் 3.இ. சிவானந்தன் 4.நா. சுந்தரலிங்கம்

***(மிகுதி அடுத்தவாரம்)***

**தொகுப்பு: எஸ்.ரி. அருள்குமரன், B.A. (Hons.) M.A.**
**எஸ்.ரி. குமரன், B.A. (Hons.) M.A**

இப்பத்திரிகை இன்'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 02.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது


# கல்வி ஒளி

தமிழ்நாதம்

02-11-2012

மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 20



## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## கணிதம் - II (மாதிரி வினாத்தாள்)

ஆசிரியர்: பி.கே. பிரேம்குமார் பகுதி - B (சென்றவாரத் தொடர்ச்சி)


(04)புறப் புள்ளி ஒன்றில் இருந்து வட்டம் ஒன்றிற்கு இரு தொடலிகள் வரையப்பட்டன எனின் பின்வருவன வற்றை நிறுவுக.

(a)
i)அத் தொடலிகள் சமனாகும்.
ii)தொடலிகள் சம கோணங்களை வட்டத்தின் மையத்தில் எதிரமைக்கும்.
iii)புறப் புள்ளியையும் மையத்தையும் இணைக்கும் கோடு தொடலிகளுக்கு இடையே உள்ள கோணத்தை இரு கூறிடும்.

(b)
P ஐயும் Q ஐயும் மையங்களாய் உடைய இரு வட்டங்கள் D இல் வெளிப் புறமாய் A,B தொடுகின்றன. கோடு AB வட்டங்களை A,B களிலே தொட்டு C இல் உள்ள தொடலியை T இல் சந்திக்கின்றது.
i) CA = CB எனவும்
ii) $A\hat{D}B=90^{o}$ எனவும் நிறுவுக.
iii) AD நீட்டப்படும் போது Q என்ற வட்டத்தை m இல் சந்திக்கின்றது. Bm ஆனது ஓர் விட்டம் என நிறுவுக.




(05)




வட்ட நாற்பக்கல் ABCD இல் நீட்டப்பட்ட பக்கங்கள் DC, AB, F இலும் சந்திக்கின்றன.


$E\hat{A}B$= FCB எனின்

i) DB விட்டம் எனவும்

ii) ACFE ஓர் வட்ட நாற் பக்கல் எனவும் நிறுவுக.

(06)
i)ஒரு நாற் பக்கலின் மூலை விட்டங்கள் ஒன்றையொன்று இரு சம கூறிடுமாயின் அது ஓர் இணைகரம் என நிறுவுக.

ii) ABCD இணைகரம் x,y என்பன DB இல் உள்ள புள்ளிகள் Dx=yB எனின் AYCX ஒரு இணைகரம் எனக் காட்டுக.



கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
சைவநெறி - I (மாதிரி வினாத்தாள்)

ஆசிரியர்: ந. கணேசமூர்த்தி பகுதி - I நேரம்: மூன்று மணித்தியாலம்

**1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (40 புள்ளிகள்)**

1.பெருங்கதை விரதம் எந்தக் கடவுளுக்குரிய விரதமாகும்?
1.விநாயகர் 2.சிவபெருமான் 3.விஷ்ணு 4.முருகன்

2.இறைவனின் ஐந்தொழில்கள்
1.பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன்
2.படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்
3.உண்ணுதல், உறங்குதல், உடுத்தல், ஆடுதல், பாடுதல்
4.சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

3.சைவ மக்களின் பிரதான பண்பு
1.முன்னோரை வழிபடுதல்
2.கோயில்களில் பலியிடுதல்
3.துறவு மேற்கொள்ளல்
4.பசித்து வருவோர்க்கு உணவளித்தல்

4.பின்வருவனவற்றுள் இறைவன் ஒருவனே என்பதை உறுதியாக உணர்த்தும் பாடலடி
1.சக்தி பின்னமிலான் எங்கள் பெருமான்
2.ஒன்றே குலம் ஒருவனே தேவன்
3.ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
4.கங்கைவார் சடைக் கயிலை நாயகா

5.கடவுளைக் குறிக்கும் சொல்
1.பதி 2.பசு 3.பாசம் 4.ஆன்மா

6.சைவசமயத்தவர் யாவரும் கட்டாயமாகப் பெற்றுக்கொள்ள வேண்டியது
1.சமய தீட்சை 2.விசேட தீட்சை 3.நிர்வாண தீட்சை 4.ஆசாரிய அபிடேகம்

7.அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் வீடு குறித்து நிற்பது
1.இல்லம் 2.முத்தி 3.நரகம் 4.கன்மம்

8.தம்பிரான் தோழர் என அழைக்கப்பட்டவர்
1.திருநாவுக்கரசர் 2.திருஞானசம்பந்தர் 3.மாணிக்கவாசகர் 4.சுந்தரர்

9.உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் விரதம் அனுட்டிப்பதன் உண்மை நோக்கம்
1.ஆகமங்கள் கூறுதற்கிணங்க ஒழுகுதல்
2.திரிகரணங்களாலும் மெய்யன்போடு வழிபடுதல்
3.உடல்நோய் தீர்த்தல்
4.உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல்

10.மாசி மாதத் தேய்பிறை பதின்நான்காம் நாளில் அனுட்டிக்கப்படும் விரதம்
1.மாத சிவராத்திரி விரதம் 2.விநாயக சதுர்த்தி விரதம்
3.மகாசிவராத்திரி விரதம் 4.மாசிமகம்



7.ஈழத்து நவீன நாடகத்தின் தந்தை
1.கலையரசு சொர்ணலிங்கம் 2.குழந்தை ம. சண்முகலிங்கம்
3.பேரா. சு. வித்தியானந்தன் 4.நா. சுந்தரலிங்கம்

8.காத்தவராயன் கூத்தில் வருகின்ற பிரதான பாத்திரம்
1.காத்தவராயன் 2.மாரியம்மன் 3.நாரதர் 4.சிவன்

9.அபிநயம் என்ற சொல்லின் நயம் என்பது
1.முன் 2.ஆடல் 3.பாடல் 4.கொண்டுசெல்லல்

10.வேலையில்லா பிரச்சினை பற்றி பேசும் நாடகம் ஒன்று
1.சங்காரம் 2.மண்சுமந்த மேனியர் 3.விழிப்பு 4.எந்தையும் தாயும்

11.காமன் கூத்தில் இடம்பெறாத பாத்திரம்
1.சிவன் 2.ரதி 3.மன்மதன் 4.அருச்சுனன்

12.ரஸங்களின் எண்ணிக்கை
1.9 2.7 3.8 4.10

13.வீ.வீ. வைரமுத்துவிற்கு பெயரீட்டி தந்த பாத்திரம்
1.நந்தனார் 2.அரிச்சந்திரன் 3.பூதத்தம்பி 4.அந்தராசி

14.நாடக அரங்கக் கல்லூரி உருவாக்கப்பட்ட ஆண்டு
1.1977 2.1978 3.1979 4.1980

15.கூத்து பாரம்பரியமாக ஆடப்படும் இடம்
1.களரி 2.களத்து மேடு 3.படச்சட்ட மேடை 4.திறந்தவெளி

16.ஈழத்து இசை நாடகங்களில் குறிப்பிடப்படும் பெண் நடிகை
1.கன்னிகா பரமேஸ்வரி 2.எம்.எஸ்.சுப்புலட்சுமி 3.கே.பி.சுந்தராம்பாள் 4.மங்கை

17.தமிழ் நவீன நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றவர்
1.பம்மல் சம்பந்த முதலியார் 2.சங்கரதாஸ் சுவாமிகள்
3.எஸ்.ஜீ. கிட்டப்பா 4.தியாகராஜ பாகவதர்

18.பின்வருவனவற்றுள் சிறுவர் நாடகம் அல்லாதது
1.முயலார் முயல்கிறார் 2.தேவலோக யானை
3.பஞ்சவர்ண நரியார் 4.உயிர்த்த மனிதர் கூத்து

19.ஈழத்தில் முதலில் பேச்சு மொழியில் நாடகத்தை படைத்தவர்
1.நா. சுந்தரலிங்கம்
2.யோ.சி.மௌனகுரு
3.குழந்தை ம. சண்முகலிங்கம்
4.பேரா.க. கணபதிப்பிள்ளை

20.இருதுயரம் எனும் நாடகத்தின் நெறியாளர்
1.க. சிதம்பரநாதன் 2.நா. சுந்தரலிங்கம்
3.அ. தாஸிஸியஸ் 4.க. பாலேந்திரா

(04)சடங்குகள் சமயத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்புகளாகும்.
(அ)திருமணச் சடங்கு என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.
(ஆ)திருமண நாளுக்கு முன்னர் நடைபெறும் நிகழ்வுகள் எவை?
(இ)"கன்னிகாதானம்" எவ்வாறு நிகழ்கிறது என்பதைக் கூறுக.

(05)மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே
(அ)திருமுறைத்தலங்கள் என அழைக்கப்படுபவை எத்தகைய தலங்களாகும்?
(ஆ)மங்களாசனம் செய்யப் பெற்ற திருத்தலங்கள் என்றால் என்ன?
(இ)தலயாத்திரை செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.

(06)திருக்கைலாய ஞான பரம்பரையில் வந்த புறச்சந்தான குரவர் சித்தாந்த உண்மைகளை வெளிப்படுத்தினர்
(அ)புறச்சந்தான குரவர் நால்வரையும் குறிப்பிடுக.
(ஆ)சிவஞானசித்தியாரை அறிஞர்கள் எவ்வாறு போற்றியுள்ளனர்?
(இ)மறைஞானசம்பந்தர் மாணவர்களிடம் முன்வைத்த மூன்று சிந்தனைகளும் எவை?

(07)பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
(அ)பெருங்கதை விரதம்
(ஆ)முப்பொருள்கள்
(இ)இந்துப்போர்ட் சு. இராசரத்தினம்
(ஈ)நாட்டார் தெய்வ வழிபாடு
(உ)செல்லப்பா சுவாமிகள்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## நாடகமும் அரங்கியலும் (மாதிரி வினாத்தாள்)

### பகுதி - I

**01)பின்வருவனவற்றுள் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

1.வாய்மொழியை பயன்படுத்தாது நடிபாகத்தை சித்தரிக்கும் கலை வடிவம்
1.நடனம் 2.கூத்து 3.ஊமம் 4.ஆடல்

2.நாடகப் படைப்பொன்றில் தயாரிப்பாளரின் பணி
1.நாடகத்தை பழக்குதல் 2.நடிகரை தெரிவு செய்தல்
3.நிதி வழங்குதல் 4.இசையமைத்தல்

3.காமன் கூத்தினை பழக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
1.மாஸ்ரர் 2.காமன்மாஸ்ரர் 3.அண்ணாவியார் 4.இயக்குனர்

4.சங்காரம் நாடகத்தின் ஆசிரியர்
1.பேரா. சு. வித்தியானந்தன் 2.பேரா.கா. சிவத்தம்பி
3.குழந்தை ம. சண்முகலிங்கம் 4.பேரா. சி. மௌனகுரு

5.அரங்கவெளி முழுவதையும் வெளிப்படுத்திக்காட்ட பயன்படும் ஒளிக்கருவி
1.பொட்டொளி 2.பரப்பொளி 3.கீற்றொளி 4.பவர்க்கான்

6.நடிகன் பாத்திரமாக மாற உதவுபவர்
1.தயாரிப்பாளர் 2.நெறியாளர் 3.இசை அமைப்பாளர் 4.காட்சியமைப்பாளர்



11.ஏடு தொட[illegible] உகந்த நாள்
1.மகாநவமி 2.சிவாமநவமி 3.சித்திரை அட்டமி 4.விஜயதசமி

12.முப்பொருள் உண்மை பற்றிக் கூறுவது
1.வேதாந்தம் 2.மாயாவாதம் 3.சைவசித்தாந்தம் 4.அத்துவிதம்

13.மெய்யடியார்களின் வரலாற்றையும் சிறப்புக்களையும் எடுத்துக் கூறும் புராணம்
1.கந்தபுராணம் 2.பெரியபுராணம் 3.இலிங்கபுராணம் 4.திருவிளையாடற் புராணம்

14.மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களைக் கொண்டிருப்பவை
1.திருக்கோயில்கள் 2.வித்தியாலயங்கள் 3.கலாலயங்கள் 4.மடங்கள்

15.கோயில் என்று சிறப்பாகப் போற்றப்படும் ஆலயம்
1.திருவண்ணாமலை 2.இராமேஸ்வரம் 3.சிதம்பரம் 4.திருவானைக்கா

16."ஆருத்திரா தரிசனம்" என்பதுடன் தொடர்புடையது
1.மகாசிவராத்திரி 2.வைகுண்ட ஏகாதசி 3.பிரதோஷம் 4.மார்கழித் திருவாதிரை

17.திருத்தொண்டத் தொகையைப் பாடியவர்
1.சுந்தரமூர்த்திநாயனார் 2.சேக்கிழார் 3.காரைக்காலம்மையார் 4.நம்பியாண்டார் நம்பி

18.அருணந்தி சிவாசாரியார் அருளிய நூல்
1.சிவஞானபோதம் 2.சிவஞான சித்தியார் 3.திருவருட்பயன் 4.திருப்புகழ்

19.திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இருவகைப் பாடல்களையும் பாடிய பெருமைக்குரியவர்
1.கருவூர்த்தேவர் 2.திருமாளிகைத் தேவர் 3.சேந்தனார் 4.குமரகுருபரர்

20.சார்ந்ததன் வண்ணமாதல்
1.பதியின் இயல்பு 2.பசுவின் இயல்பு 3.ஆணவத்தின் இயல்பு 4.மாயையின் இயல்பு

21.திருநீறு அணிதல், திருவைந்தெழுத்து ஓதல், சமய தீட்சை பெறுதல் என்பன
1.சைவ மரபு 2.சாக்த மரபு 3.அவைதிக மரபு 4.வைணவ மரபு

22.பிரதோஷ விரதம்
1.சக்தி விரதங்களுள் ஒன்று 2.சிவ விரதங்களுள் ஒன்று
3.கந்த விரதங்களுள் ஒன்று 4.விஷ்ணு விரதங்களுள் ஒன்று

23.திருவருட்பயன் நூலை இயற்றியவர்
1.மெய்கண்டதேவர் 2.அருணந்தி சிவாசாரியார் 3.மறைஞானசம்பந்தர் 4.உமாபதி சிவாசாரியார்

24.மகரசங்கிராந்தி என அழைக்கப்படுவது
1.தைப்பொங்கல் 2.சித்திரைப் புத்தாண்டு 3.ஆடிப்பிறப்பு 4.தைப்பூசம்

25.'வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதிய' புனித நூல்கள்
1.தேவாரமும் திருவாசகமும்
2.திருவாசகமும், திருக்கோவையாரும்
3.திருக்குறளும், திருப்புகழும்
4.திருமந்திரமும், திருவிசைப்பாவும்

26.ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌரவித்த ஆதீனம்
1.தருமபுர ஆதீனம் 2.மெய்கண்டார் ஆதீனம் 3.நல்லை ஆதீனம் 4.திருவாவடுதுறை அதீனம்

27.குருலிங்க சங்கம வழிபாடு என்பதில் சங்கமம் என்பதால் குறிப்பிடப்படுபவர்கள்
1.சிவனடியார்கள் 2.புலவர்கள் 3.பிராமணர்கள் 4.தேவர்கள்

28.இராமாயணம் மகாபாரதம் என்பன
1.புராணங்கள் 2.வேதங்கள் 3.இதிகாசங்கள் 4.உபநிடதங்கள்

29.இலங்கையைச் சிவபூமி எனப் போற்றியவர்
1.திருஞானசம்பந்தர் 2.திருமூலர் 3.சுந்தரர் 4.நாவலர் பெருமான்

30.ஆன்மாவின் அறிவை மறைத்து நிற்பது
1.ஆணவம் 2.கன்மம் 3.மாயை 4.பாசம்

31.கந்தபுராணம் உணர்த்தும் முக்கிய கருத்து
1.சூரபத்மன் நற்குணவியல்புகளைக் கொண்டவன் 2.அசுரர்களும், தேவர்களும் கடவுளில் நம்பிக்கை அற்றவர்கள்
3.தர்மம் வெல்லும் அதர்மம் தோற்கும் 4.முருகன் வேறு சிவன் வேறு

32.இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது
1.நன்றாக உண்ணவும், உடுக்கவும், உல்லாசமாக வாழவும்
2.பொருள்தேடி இன்பமாக வாழ்வதற்கு
3.நல்வினை தீவினை செய்து மறுபிறப்பு எடுப்பதற்கு
4.கடவுளை நம்பி முத்தியின்பம் பெறும் பொருட்டு

33.திருக்கைலாசபரம்பரைச் சந்தான குரவர்களுள் ஒருவர்
1.மாணிக்கவாசக சுவாமிகள் 2.மறைஞான சம்பந்தர் 3.திருஞானசம்பந்தர் 4.சுந்தரர்

34.அபிராமிப்பட்டரின் இஷ்டதெய்வம்
1.பிள்ளையார் 2.முருகன் 3.விஷ்ணு 4.தேவி

35.யாழ்ப்பாணம் நல்லூர் முருகப் பெருமான் ஆலயத்தைக் கட்டிய மன்னன்
1.சங்கிலியன் 2.குளக்கோட்டன் 3.எல்லாளன் 4.ஆறாம் புவனேகபாகு

36.'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்" இவ் அடியில் பாலாவித் தீர்த்தத்தையுடைய ஆலயம்
1.திருக்கோணேச்சரம் 2.திருக்கேதீச்சரம் 3.முன்னேச்சரம் 4.நகுலேஸ்வரம்

37.ஒரு பொல்லாப்பும் இல்லை' 'முழுவதும் உண்மை' 'ஆர் அறிவார்' போன்ற மகா வாக்கியங்களை அருளியவர்
1.கடையிற் சுவாமிகள் 2.திருமூலர் 3.செல்லப்பா சுவாமிகள் 4.பட்டினத்தார்

38.சமய குரவர்
1.நால்வர் 2.மூவர் 3.அறுபத்து மூவர் 4.ஒன்பதின்மம்

39.சாக்கிய நாயனார் முத்தியடைந்த நாள்
1.பங்குனி ஆயிலியம் 2.மார்கழிப் பூராடம் 3.ஐப்பசிச் சுவாதி 4.சித்திரைச் சதயம்

40.சேக்கிழாரைக் குறிக்கும் சிறப்புப் பெயர்
1.தாண்டக வேந்தர் 2.தொண்டர் சீர்பரவுவார் 3.தென்னவன் பிரமசர்யன் 4.தேவார முதலி





முதலாம் வினாவும், இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும், இரண்டாம் வினாவின் விடைக்கு 16 புள்ளிகளும், ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 8 புள்ளிகளும் வழங்கப்படும்.

**(01)பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

(i)"தொல்லுலகும் போற்றும் சுழிபுரம்" என்னும் கிராமத்திலே அமைந்துள்ள விநாயகர் ஆலயம் எது?

(ii)ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு கடவுள் எடுக்கும் மூவகைத் திருமேனிகளும் எவை?

(iii)தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் பெற்ற நாயனார் யார்?

(iv)அச்சுதகளப்பாளருக்கு வழங்கப்பட்ட தீட்சாநாமம் எது?

(v)சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் ஸ்தாபகர்கள் யாவர்?

(vi)நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

(vii)எடுத்தவன் தருக்கை என்ற தேவாரப் பாடலில் குறிப்பிடப்படும் இதிகாசக் கதை எது?

(viii)சித்திர புத்திரனார் விரதம் பற்றிக் கூறும் நூல் எது?

(x)தெட்சிணாயனத்தின் முதல்நாளில் கொண்டாடப்படும் பண்டிகை எது?

(xi)நினைக்க முத்தி தரும் தலம் எது?

(02)

**(அ) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக**

**(ஆ)அவற்றின் பொழிப்புரையை எழுதுக.**

(i)"வேயுறு தோளி பங்கன்........" (ii)"திருவேயென் செல்வமே...."

(iii)"கோலமால்வரை.........." (iv)மூவரென இருவரென........"

(v)"தாதையைத் தாள......."

(03)சமயம் வேறு, வாழ்வு வேறு அன்று

(அ)நீங்கள் கற்ற சைவசமய பாடப்பகுதிகளுள் வாழ்க்கையோடு இணைந்ததுதான் சமயம் என்பதைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளவை எவை?

(ஆ)சைவர்களுக்கு வாழ்க்கையோடிணைந்த பண்டிகையாகத் தைப் பொங்கல் முக்கியத்துவம் பெறுமாற்றை விளக்குக.

(இ)தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்பான புராணக் கதையினைக்கூறி அக்கதை உணர்த்தும் தத்துவத்தினை எடுத்துக் காட்டுக.

மஞ்சள் ஆறு அடிக்கடி வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுவதற்கு பிரபலம் அடைந்ததாகும். 1931 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மிகப் பெரிய வெள்ளம் காரணமாக 800,000 முதல் 4,000,000 மக்கள் இறந்தனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1993 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பெரிய வெள்ளம் வரலாற்றில் இடம் பெற்ற பெரும் அளவில் மக்களை பாதித்து அதிக அளவில் நட்டம் விளைவித்த ஒரு நிகழ்வாகும்.

1998 ஆம் ஆண்டில் சீனாவின் யாங்சே ஆற்றின் வெள்ளப் பெருக்கு பெரும் பேரழிவாக பதினான்கு மில்லியன் மக்களை பாதித்து வீடு வாசல் அனைத்தையும் இழக்க நேர்ந்தது.


2000 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மொசாம்பிக் பெருவெள்ளம் நாட்டின் பெரும்பான்மையான நிலப்பகுதிகளை மூன்று வாரங்களுக்கும் மேல் முழுமையாக மூழ்கடித்தது, அதன் விளைவாக பல ஆண்டுகளுக்கு அந்த நாடு சீரழிந்து தலை தூக்க இயலாத நிலைமை ஏற்பட்டது.

வெப்ப மண்டலங்களில் ஏற்படும் சூறாவளிக்காற்று பொங்கும் புயல் பேரலை எழுச்சியுடன் கூடிய விரிவான வெள்ளப்போக்கை, பின் வரும்படி, பல இடங்களில் ஏற்படுத்தியது:

போலா சூறாவளிக்காற்று கிழக்கு பாகிஸ்தான்'பாகிஸ்தானை அதாவது தற்சமயம் பங்களாதேஷ் நாட்டை 1970 ஆம் ஆண்டில் மிக மோசமாக வீசி தாக்கியது.

1975 ஆம் ஆண்டு சீனாவை தைபூன் நினா என்ற சூறாவளி தாக்கியது.

வெப்ப மண்டல சூறை அள்ளிசண் 2001 ஆம்



ஆண்டில் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள ஹியூஸ்டன் நகரத்தை கடுமையாக தாக்கியது.

கத்ரீனா சூறாவளி நியூ ஓர்லீன்ஸ் எனும் மாகாணத்தையே முற்றிலுமாக 2005 ஆம் ஆண்டில் நீரில் மூழ்கடித்தது. "லேவீ" எனப்படும் தடுப்புக்கரையை சரிவர அமைப்பதில் தோல்விகண்டதால், அந்த மாநிலத்தில் மிகையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மாநிலத்தையே சீர்குலைய வைத்தது.

**ஏரி வெடித்துக் கிளம்புதல்**

நியோஸ் ஏரியின் வெடிப்பு வாயுக்களை கிளப்பியது: ஒரு பசு அதனால் பாதிப்படைந்தது.

ஏரி வெடித்து நீர்ப்பெருக்கு ஏற்படுவதுண்டு. அதன் காரணம் கரியமில வாயு. (ஊமு)2"ஸஸஎனப்படும் கரியமில வாயு ஏரியின் ஆழத்தில் இருந்து வெடித்து நீர் பொங்கி வருவதாகும், இதன் விளைவாக வனவிலங்குகள், கால்நடைகள், மனிதர்கள் யாவரும் பிராண வாயு இல்லாததால், மூச்சுத் திணறல் ஏற்பட்டு பாதிப்பு அடையலாம். அப்படி ஏரியில் இருக்கும் நீரை இடம் பெயர்த்து, கரியமில வாயு வெடித்துக் கிளம்பும் சம்பவத்தால் ஏரியில் சுனாமி ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.நிலச்சரிவுகள், எரிமலை சீற்றம் அடைவது அல்லது வெடித்துச் சிதறுதல் ஆகிய எதிர்வினைகளை இது போன்ற ஏரி வெடிப்பு சம்பவங்கள் முடுக்கி விடுவதாக அறிவியல் நிபுணர்கள் நம்புகிறார்கள்.

இதுநாள் வரை, இரண்டே இரண்டு ஏரி வெடிப்பு நிகழ்வுகள் மட்டுமே கவனத்திற்கு உட்பட்டு பதிவாகியுள்ளது.

1984 ஆம் ஆண்டில், கம'ரூன், பகுதியில் ஏரி மொனெளன் என்ற ஏரியில் நிகழ்ந்த வெடிப்பின் காரணம் அருகில் வாழ்பவர்கள் 37 பேர்களை மரணமடைந்தார்கள்.

அதன் அருகில் ஏரி ந்யோஸ் என்ற ஏரியில் 1986 ஆம் ஆண்டில் நடந்த பெரும் வெடிப்பில் 1,700 முதல் 1,800 பேர்கள் மூச்சு திணறல்ஏற்பட உயிர்துறந்தனர்.

சுனாமிகள் "ஆழிப் பேரலைகள்"

டிசம்பர் 26, 2004 அன்று நிகழ்ந்த நிலநடுக்கம் காரணம் உருவான சுனாமி பேரலை அஓ நங்கை தாக்குவது.

கடலுக்குள் நிலநடுக்கம் சுனாமியாக திரிந்துவிடும், அப்படி ஒரு சம்பவம் ஆஓ நங், தாய்லாந்து அலாஸ்கா நாட்டில் 2004 ஆம் ஆண்டு இந்தியன் பெருங்கடலின் நில நடுக்கம் நிகழ்ந்தது, சில நேரங்களில் நிலச்சரிவு நிகழ்வுகளும் இதற்கு வித்திட்டு அதனால் நடந்த நிகழ்வுகள்: அலாஸ்காவின் லிடுய விரிகுடாவில் நடந்தது.

ஆஓ நங், தாய்லாந்து (2004). 2004 ஆம் ஆண்டில் இந்தியன் பெருங்கடல் நில நடுக்கம் காரணமாக குத்துச் சண்டை நாள் சுனாமி ஏற்பட்டு அவ்விடத்தில் பேரழிவை ஏற்படுத்தியது.

லிடுய விரிகடல், அலாஸ்கா (1953). ஒரு பெரிய அளவு சுனாமி இங்கு நடந்தது. அதுவே பதிவு செய்ததில் மிகப்பெரும் நிகழ்வாகும்.

இது நில அசைவு அட்டவணை அதற்குள் இடம் பெறும் வகையாகும், ஏன் எனில் இது நில நடுக்கத் தோடு தான் இது ஆரம்பமாயிற்று.

**வானிலை பேரழிவுகள்**

பனிப்புயலுக்குப் பிறகு எங் திசையில் செலுத்துதல் பனிப்புயல், மார்ச் 1966

பனிப்புயல்கள்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வீசிய முக்கியமான பனிப்புயல்கள் ஆவன:

1888 ஆம் ஆண்டில் வீசிய மிகப்பெரும் பனிப்புயல்

பள்ளி வீடு பனிப்புயல் அதே வருடம் முன்கூட்டியே வீசியது.

பனி சூறாவளி'அர்மிச்டிசே நாள் பனிப்புயல்ஸஸ 1940 ஆம் ஆண்டு நிகழ்வு

1993 ஆம் ஆண்டு நூற்றண்டின் புயல்

**சூறாவளிப் புயல்கள்**

சைக்ளோன் சூறாவளி, டிரபிகள் அயன மண்டல சூறை , ஹரிகேன் சுழல்காற்று , தைபூன் சண்டமாருதம் ஆகிய புயல்கள் எல்லாமே அரிய இயல் நிகழ்ச்சிகளாகும். சூறாவளி புயல் வீசுவது அனைத்தும் கடல்பரப்பின் மேல் நடைபெறுகிறது. 1970 ஆம் ஆண்டில் நிகழ்ந்த போலா சூறாவளி மிகவும் கடுமையானதாகும், அதை விட பயங்கரமான சூறாவளி அட்லாண்டிக் சூறைக்காற்று 1780 ஆம் ஆண்டில் மார்டிநிக்குயூ செயின்ட் யூச்டேடுயஸ் மற்றும் பார்படாஸ் ஆகிய இடங்களை தாக்கியதாகும். 2005 ஆம் ஆண்டில் வீசிய கத்ரினா புயலானது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடலோர வளைகுடா பகுதியை முற்றிலுமாக அழித்தது.

**வறட்சி**

வரலாற்றில் பதிவுபெற்ற மக்களை மிகவும் பாதித்த வறட்சிக் காலங்கள் ஆவன:

1900 ஆம் ஆண்டு இந்தியாவை தாக்கிய வறட்சி - 250,000 முதல் 3.25 மில்லியன் மக்களை பலி வாங்கியது.

1921-22 ஆம் ஆண்டு சோவித் யூனியன் வறட்சிகள் - 5 மில்லியன் பேர்களை பட்டினியால் மடியச் செய்தது.

1928-30 ஆம் ஆண்டுகளில் வடமேற்கு சீனா வறட்சியால் வாடிய பொது, 3 மில்லியன் பேர்களுக்கும் மேலாக பஞ்சத்தில் மாண்டனர்.

1936 மற்றும் 1941 ஆம் ஆண்டுகளில் சிசுவான் மாகாணம் - சீனாவில் - 5 மில்லியன் மற்றும் 2.5 மில்லியன் மரணங்களை முறையே சம்பவித்தது.

2006 ஆம் ஆண்டில் மேற்கு ஆஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா, விக்டோரியா மற்றும் க்வீன்ஸ்லாந்து ஆகிய ஆஸ்திரேலிய மாகாணங்கள் யாவும் ஐந்து முதல் பத்து வருடங்கள் வறட்சியில் வாடித் தவித்தன. முதல்முறையாக, வறட்சியானது பெருநகர மக்களை மிகவும் பாதித்தது.

2006 ஆம் ஆண்டு சிசுஅன் மாகணம் சீனா நவீன காலத்தில் கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த அனுபவம் பெற்றது. எட்டு மில்லியன் மக்கள், மற்றும் ஏழு மில்லியன் கால்நடைகள் யாவும் தண்ணீர் பற்றாக் குறையால் வாடின.

**ஆலங்கட்டி மழைப்புயல்**

மழைப் புயல் அல்லது கல்மாரி பெய்யும் பொழுது பனிகட்டி யாக உரு எடுப்பதால் "ஆலங்கட்டி" மழை எனவும் கூறுவதுண்டு. குறிப்பாக பாதிப்புடன் கூடிய பனிமழை தாக்கிய பகுதிகள்: முனிச், ஜெர்மனி ஆகஸ்ட் 31, 1986ஆம் ஆண்டு, ஆயிரக் கணக்கான மரங்கள் விழுந்தன. மற்றும் பல மில்லியன் டாலர்கள் இன்சூரன்ஸ் காப்பீடு தொகையாக வழங்கப் பெற்றது.

**காத்ரினா சூறாவளி**

விக்டோரியா ஆஸ்திரேலியாவில் வீசிய வெப்ப அலை நிகழ்வில் பெருமளவு முட்புதர் தீ 2009 ஆம் ஆண்டு மூண்டது. மெல்பேர்ண் நகரத்தில் மூன்று தினங்களுக்கு மேலாக அதிக வெப்ப நிலையை உணர்ந்தது, வெப்பத்தின் அளவு 43°C.க்கும் மிகையாக இருந்தது.

## சுழல் வளிகள்

**பல்வேறு வகையான சுழல் வளிகள்:**

**சூப்பர் செல் சுழல் வளிகள்**

சூப்பர் செல் சுழல் வளிகள் மிக வன்மையான சுழல்காற்றாகும். அது இடியுடன் சேர்ந்து வருவதால், சூப்பர் செல் சுழல் வளியானது நெடுநேரம் இடிஒலி கலந்து வருவதுடன் வளியை அல்லது காற்றை தொடர்ந்து வேகமாக மேல் நோக்கி சுழற்ற வைக்கும். இப்புயல் காற்றுகள் அதிகப் பட்சமாக சுழல் வளியினை உருவாக்கும் இயல்பு படைத்ததாகும். இவ்வகையில் ஒருசில காற்றுகள் பெரியதொரு ஆப்பு வடிவத்தில் கம்பீரமாக அமைந்திருக்கும். சூப்பர் செல் இடிப்புயலானது அடைஅடுக்கு அல்லது பாளம் அதன் கீழ்ப்புறம் தொங்கிக் கொண்டிருக்கும். அதற்கு பெயர் "சுவர் மேகம்" ஆகும். அது அடுக்கு பாளமாகவே தோற்ற மளிக்கும். மேகம் அதன் கீழ்ப்புறம் அடியில் தொற்றிக் கொண்டிருப்பது போலுள்ள தோற்றத்துடன் அமைந்திருக்கும். பாளத்தின் ஒரு புறம் மழை இன்றி இருக்கும், மறுபுறம் அடர்ந்த அம்பு அல்லது ஈட்டி போல மழை பொழிந்து தோன்றும். சூப்பர் செல் சுழலும் மேல்பகுதியை ரேடார் மாயத்தாற்றங்களில் தோன்றி, அது "உள்ளிழை சூறாவளி" என்று வழங்குகிறது.

சூரைகாற்றுகள் சூப்பர் செல்லுடன் இடியோடு சேர்ந்து வரும் போது தரையில் நெடுநேரம் தொடர்பு கொண்டிருக்கும் ஒருமணி அதற்கும் மேலாக! மற்ற வகை சூறாவளிகள் போல வன்மை மிக அதிகம் படைத்திருக்கும். அதனால் மணிக்கு இருநூறு மைல் வேகத்தில் வீசும்.

கொண்டு இருக்கும். அதிகம் தீங்கு ஏதும் செய்யாது என்றாலும் சிறிய அளவில் சேதங்கள் ஏற்படுத்த வல்லவையாகும். சாலைகளில் ஓடுகின்ற வண்டிகளையும், வாகனங்களையும் எல்லாவற்றையும் அவை தாக்கும். காண்போரின் கண்களில் தூசுகளையும் கொண்டு வந்து சேர்க்கும்.

**தீச் சுழல்கள்**

சில நேரங்களில் காடுகளில் பரவும் காட்டுத்தீயானது அல்லது எரிமலை வெடிப்பானது தீ சுழல் காற்றை உருவாக்கும். அது சுற்றி வீசும் போது அனலையும் புகையையும் கக்கும். நெருப்பின் மேல் பரப்பில் பலம் குன்றிய சுழல் அல்லது சுழி காற்றில் உள்ள போது இது நடைபெறும்.நெருப்புடன் சுழன்று வரும் காற்றுகள் மணிக்கு நூறு மைல் வேகம் கொண்டு வீசும் என கணக்கிட்டுள்ளது. அவை அந்த அந்த நேரங்களில் தீசூரைகாற்றுகள், தீ பேய்கள், அல்லது தீ சுழல்கள் என்று அழைக்கப் படுகின்றன

கட்டுக்கு அடங்காத தீ என்பது காட்டு பகுதிகளில் பரவலாக திடுமென தோன்றும். இவை ஏற்படுவதற்கான பொதுவான காரணங்கள் ஆவன: மின்னல் மற்றும் வறட்சி என்றாலும் மனிதர்களின் அஜாக்கிரதை அதனாலும் கலவரம், சச்சரவுகள் ஏற்படும் போதும் தீப்பிழம்புகள் கொழுந்து விட்டு சூழ்ந்து கொண்டு எரியும். கிராமப்புறப் பகுதிகள் மட்டும் அல்லாமல், அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்கு இவை ஆபத்தாக அமைந்துவிடும்.

ஒரு குறிப்பிடத் தக்க அம்சமுடன் கட்டுக்கு அடங்காத காட்டுத்தீ 2009 ஆம் வருடத்தில் விக்டோரியன் எனப்படும் புதர்த்தீ ஆஸ்திரேலியா தீவு கண்டத்தில் ஏற்பட்டது.

## ஆரோக்கியமும் நோயும்

**தொற்றுநோய்கள்**

ஒரு யெச் 5 எநிய் வைரஸ, ஏவியான் இன்பிளுஎன்சா

ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளும் போது சுலபமாக தொற்றிக் கொள்ளும் நோய்கள் மனித மக்கள் தொகையில் அதி விரைவாக, வேகமாக பரவும். பெரும்பரவல் தொற்றுகள் என்பது உலகெங்கிலும் விரைவாகப் பரவும். வரலாற்றில் பலபல தொற்றுகள் வந்துள்ளன. அதில் முக்கியமானது கருப்பு சாவு ஆகும்.

**கடந்த நூற்றாண்டுகளில் முக்கியமான பெரும்பரவல்கள் தொற்றுகள் ஆவன:**

1918 ஆம் ஆண்டு ஸ்பானி' புளூ பெரும் பரவல்நோய், உலகளவில் 50 மில்லியன் பேர்களை கொன்றுள்ளதாக மதிப்பிட்டுள்ளது.

1957-58 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த ஆசியான் புளூ பெரும்பரவல் நோய் ஒரு மில்லியன் பேர்களின் உயிரைக் குடித்ததாக மதிப்பிட்டுள்ளது.

1968-69 ஆம் ஆண்டு ஹோங் காங் புளூ பெரும்பரவல் நோய்

2002-3 ஆம் ஆண்டு சரஸ் பெரும்பரவல் நோய்

எய்ட்ஸ் பெரும்பரவல் நோய், தொடக்கம் 1959 ஆம் ஆண்டு முதல்

எச் ஒன்று என் ஒன்று இன்பிளுயன்சா பன்றி காய்ச்சல் பெரும்பரவல் நோய் 2009

பிற நோய்கள் மிக நிதானமாகப் பரவுகின்றன. ஆனால் அவற்றை உலக சுகாதார நிறுவனம்சர்வ தேச ஆரோக்கிய ஆபத்து நெருக்கடிகளாகவே கருதப்படுகின்றன.

எக்ஸ்டிஆர் டி.பி காச நோயின் ஒரு இனப்பிரிவாகும். மருந்து சிகிச்சைகள் அளிப்பதை எதிர்க்கும் தடுப்பாற்றல் பரந்த முறையில் பெற்ற ஒரு வகையாகும்.

மலேரியா நோய் மதிப்பீட்டின் படி ஒவ்வொரு ஆண்டும் 1.5 மில்லியன் மக்களை கொன்று வருகிறது.

"எபோல ஹெமொர்ரஜிக்" காய்ச்சல் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் ஆப்பிரிக்காவில் பலமுறையாக தாக்கி உயிர்ப்பலி வாங்கியுள்ளது.

# முள்ளிவாய்க்கால் கடற்கரையில் ஐந்து ஆட்லறிகள் மீட்பு

வெள்ளாமுள்ளிவாய்க்கால் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட 5 ஆட்டிலறிகளும் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என உறுதி செய்யப்பட்டுள்ளது. நிலம் புயலினால் ஏற்பட்ட மண்அரிப்பை அடுத்து, விடுதலைப் புலிகளால் கரையோரத்தில் புதைத்து வைக்கப்பட்ட இந்த 5 ஆட்டிலறிகளையும் படையினர் கைப்பற்றினர்.

இவற்றில் 130 மி.மீ ஆட்லறி பரல் ஒன்று,152 மி. மீ ஆட்லறி பரல்கள் நான்கு, இவற்றுக்கான பாதைகள், 120ஹோஸ்பவர் கொண்ட படகுவெளி இணைப்பு இயந்திரங்கள் இரண்டு என்பன அடங்குகின்றன.

இவை அனைத்தும் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. நிலம் புயலினால், காட்டிக்கொடுக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ள இந்த ஆட்டிலறிகள் விடுதலைப் புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன என்ற விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்துள்ளது.

இவை விடுதலைப் புலிகளால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டவையா என்று கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு வெள்ளமுள்ளிவாய்க் கால பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. 130 மி.மி மற்றும் 150 மி.மி. அளவுடைய ஐந்து எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு அதிசக்தி வாய்ந்த படகுகளில் இந்த எறிகணைகள் பொருத்தப்பட்டிருந்தன. இராணுவத்தினர் குறித்த ஆயுதங்களை மீட்டெடுத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

# ஒரு வானொலிக்கு இனிமேல் ஒரு அலைவரிசை மட்டுமே

நேற்று முதல் அனைத்து வானொலி பண்பலை ஒலிபரப்பு அலைவரிசைகளும் மாற்றப்பட்டுள்ளன. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது குறித்து ஆணைக்குழு இதுபற்றி அறிவித்துள்ளது.


45 வரையான பண்பலை ஒலிபரப்பு அலைவரிசைகளின் அதிரவெண்களை மாற்றி அமைப்பதுடன் மேற்படி 45 பண்பலை ஒலிபரப்பு அலைவரிசைகளும் 87.5 தொடக்கம் 108 வரையான மெஹா ஹேட்ஸ் வீச்சில் ஒலிபரப்பு செய்யப்படும்.

இம் மாற்றங்கள் 31ஆம் திகதி நள்ளிரவு முதல் இடம்பெறவுள்ளன. இதேவேளை, இப்புதிய திருத்தத்தின்படி தொழில்நுட்பக்கோளாறுகளைக் குறைப்பதுடன் இலங்கையின் எப்பகுதியிலும் தெளிவான வானொலி ஒலிபரப்பை பெறக்கூடியதாக இருக்குமென ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் சில வானொலிச் சேவைகள் ஒன்றுக்கு மேற்பட்ட அலைவரிசைகளையும் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக புதிய வானொலிச்சேவைகளுக்கு அலைவரிசைகளை ஒதுக்கமுடியாதுள்ளது. இதன் காரணமாக தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவால் ஒரு வானொலிச்சேவைக்கு இரு அலைவரிசைகள் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**ரிசானா நாபிக் விவகாரம்:**

# சவூதி அரேபியா செல்கிறார் சட்ட மா அதிபர் பாலித



சவூதியில் பணிப்பெண்ணாக கடமையாற்றி சிசுவொன்றை கொலை செய்ததாகத் தெரிவித்து மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையின் ரிசானா நாபிக்கிற்கு மன்னிப்பு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.

ரிசானா நாபீக்கிற்கு முழு அளவிலான மன்னிப்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த விஜயம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சிசுவொன்றை கொலை செய்த குற்றத்திற்காக சவூதி அரேபிய நீதிமன்றம் மரண முழு அளவிலான பொதுமன்னிப்பை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்களை ஆராயும் நோக்கில் வெளிவிவகார அமைச்சு சட்ட மா அதிபரை சவூதிக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளது. விரைவில் சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாக சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எப்போது என்ற திகதியை தற்போதைக்கு குறிப்பிட முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

# அடை மழை ஓய்ந்தாலும் சீரற்ற காலநிலை தொடர்கிறது

நாடு முழுவதிலும் சீரற்ற காலநிலை நீடித்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. நீலம் புயலின் தாக்கம் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மத்திய மலைநாடு, மேல், சப்ரகமுவ மற்றும் தென் பிராந்தியங்களில் கடும் மழை பெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சீரற்ற காலநிலை நீடிக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்தக் காலநிலை மாற்றத்தின் எதிரொலியாக குளிர் மற்றும் பனிமூட்டம் காணப்படுவதாகவும் வானம் மப்பும் மந்தாரமுமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

சில பகுதிகளில் கடுமையான காற்றும் வீசக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. நீலம் புயல் இலங்கையை கடந்து சென்றுள்ளதாகவும், நேரடியான புயல் பாதிப்பு எதுவும் கிடையாது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் கடந்த சில தினங்களாக இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 13 மாவட்டங்களில் ஆயிரத்து 139 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 411 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்துள்ளார்.

இவர்களில் அதிகளவானவர்கள் மூதூர் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் அங்கு ஆயிரத்து 721 பேர் இவ்வாறு இடம்பெயர்ந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் 24 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பிரதேச செயலங்கள் ஊடாக சமைத்த உணவுகளும், ஏனைய நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக 513 வீடுகள் அழிவடைந்துள்ளன. இவர்களில் 65 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. மழை வெள்ளம் காரணமாக 13 ஆயிரத்து 74 குடும்பங்களை சேர்ந்த 49 ஆயிரத்து 788 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை வடக்கு, கிழக்கில் கடல் பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிவில் நிர்வாக செயற்பாடுகளுக்கு இராணுவத்தினர் போதிய ஒத்துழைப்பு

**யாழ்.அரச அதிபர்**



யாழ்.குடாநாட்டில் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் படைத்தரப்பு போதிய ஒத்துழைப்பை வழங்கிவருவதாக நற்சான்றிதழ் வழங்கியுள்ளார். யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் பொது மக்கள் சிவில் நிர்வாக தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கொண்டு 26 மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் வைப்பு புத்தகங்கள் என்பன வழங்கினர்.

புலமைப்பரிசில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்றினைப் படைத்தலைமை அங்கு ஏற்பாடு செய்திருந்தது. அங்கு பேசிய மாநகர முதல்வரோ தமிழ் மக்கள் இராணுவத்தினரை எதிரிகளாக பார்த்த காலம் மாறி சகோதரர்களாக கருதும் காலம் மாறி விட்டது என்றார்.

# போலிக் கடவுச் சீட்டுடன் இலங்கையர் ஒருவர் சென்னையில் கைது



50 போலி கடவூச்சீட்டுகளுடன் சென்னையில் இருந்து இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செல்ல தயாராக இருந்த இலங்கை பிரஜை ஒருவர் சென்னை விமான நிலைய அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த நஸார் மொஹமட் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் தனது பயண பொதியில் போலி கடவூச்சீட்டுகளை மறைத்து வைத்து கொண்டு விமானத்தில் ஏற முயற்சித்த சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் சென்னையில் தங்கியிருந்த போலி விசாக்களை தயாரித்துள்ளதாக சென்னை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆசியா பவுண்டேசனின் 'சிட்டிசன் ரிபோர்ட் கார்ட்'...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் முன்வைக்கின்றன.

பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன் தயாரிக்கப்படுகின்ற இந்த அறிக்கையில் சாதகங்கள் மற்றும் பாதகங்கள் காணப்பட்டாலும் பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் முன்னிலையிலேயே வெளியீடு செய்யப்படுகின்றது.

இந்த சிட்டிசன் ரிபோர்ட் கார்ட் அண்மையில் நுவரெலியா மாநகர சபையில் வெளியிடப்பட்டது.

இதன்போது இந்தத் தயாரிப்பில் ஈடுபட்ட நிறுவனங்களினால் மாநகர சபையை வினைத்திறனுடன் மேற்கொள்வது தொடர்பில் பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.


இதே போன்ற அறிக்கையினை கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாநகர சபை பிரதேசங்களில் தயாரிப்பதற்கு ஆசியா பவுண்டேசன் தீர்மானித்துள்ளது. அதாவது சமூக பொறுப்புடமை செயற்பாடு நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இடம்பெற வேண்டும் என்ற நோக்கிலேயே கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாநகர சபைகளுக்கு ஆசியா பவுண்டேசனின் சிட்டிசன் ரிபோர்ட் கார்ட் தயாரிப்பு பணி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இந்த சிட்டிசன் ரிபோர்ட் கார்ட் தயாரிப்பு செயற்பாட்டினை எதிர்காலத்தில் நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் மேற்கொள்ள ஆசியா பவுண்டேசன் திட்டமிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அரச நிறுவனங்களில் பொறுப்புடமை செயற்பாட்டை ஏற்படுத்துவதற்காக அடிமட்ட அரச அமைப்பான உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புடமை செயற்பாட்டை மேற்படுத்த ஆசியா பவுண்டேசனினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடு வெற்றியளிக்குமா என்பது கேள்விகுறியாகவே உள்ளது.

நன்றி : இணையம்

# இன்று சகல ஆத்துமாக்கள் தினம்



ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 2ஆம் திகதியை இறந்தோரை நினைவுகூரும் தினமாக கிறிஸ்தவ மக்கள் அனுசரித்து வருகின்றனர். இந்நாளில் தங்கள் உற்றார், உறவினர், நண்பர்களின் கல்லறைகளை நன்கு கழுவி சுத்தம் செய்வதுடன் அங்கு மெழுகுவர்த்தி ஏற்றி பிரார்த்தனையும் செய்கின்றனர். இறைவனின் அருகில் வாழும் பேறு பெற்ற இந்த ஆன்மாக்களிடம் நாம் வேண்டினால், நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்ற விசுவாசத் [illegible] அடிப்படையிலேயே இவ்வாறு செய்கின்றனர். இந்நாளை, "சகல ஆத்துமாக்கள் தினம்" என்று அழைக்கப்படுகிறது.

சிறிது தூரமோ, நீண்ட தூரமோ நம் வாழ்க்கைப் பயணத்தில் நம்மோடு உடன் வந்தவர்கள் அல்லது நாம் பிறக்கும் முன்பே இவ்வுலகைப் பிரிந்தவர்கள், அவர்கள் நம் தாய், தந்தையராகலாம், உற்றார் உறவினராகலாம், நண்பராகலாம், மூதாதையராகலாம், யாரும் நினையாத ஆத்துமங்களாகலாம், இப்புவியில் தோன்றி மறைந்த யாவரையும் நினைந்து அவர்களுக்காக வேண்டுதல் செய்யும் நன்னாளாக இன்றைய தினம் அமைகிறது அவர்கள் அனைவரும் மறுமை எனும் பரிசைப் பெறவேண்டி தான, தருமங்கள் செய்வதும், வழிபாடுகள் நிகழ்த்துவதும் புண்ணியம் தேடித் தரும் செயல்களாகும். ஆத்துமார்த்தமாக அவர்கள் நம்மோடு, நமக்காக, நம் உதவியை நாடி நிற்கிறார்கள். நிலையில்லாத இப்புவி வாழ்வை பற்றற்று வாழ்ந்து பயணத்தினை இனிதே நிறைவு செய்வோம். வாக்களிக்கப்பெற்றதைப் பெற்று மகிழ்வோம். (இணையம்)

## சோதிடமும் சமுதாய சம்பிரதாயங்களும்

சூரியன் உதிப்பதற்கு சிலநாளிகைக்கு முன்பு துயிலெழ வேண்டும் என்பது தொடக்கம் பல அன்றாட வாழ்க்கை முறைச் சம்பிரதாயங்களை நியமப்படுத்தியிருக்கும் நம் முன்னோர்கள், ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் இயற்கையோடு தொடர்புபடுத்தி விதி வகுத்து முன்னோர்கள் நியத்தங்களை அறிந்து கொண்டு நடப்பதும், எதிர்காலம் பற்றிய அறிவும் தெளிவும் கொண்டவர்களாக தம் வாழ்வுமுறையை நெறிப்படுத்தியதும் கவனம் செலுத்தும் விடயங்களாக அமைந்தன.

தூக்கத்திலிருந்து விழிப்பூட்டுவதற்கு சேவல் கூவுதலையும், பிற பறவை புள்ளினங்களின் ஒலியையும் விடியலில் கீழ்த்திசையில் விடிவெள்ளி தோன்றுதலையும் துணைசெய்கின்றன. மேலும், ஆலயங்களின் கண்டாமணியோசை அந்தணர் வேதஒலி, மக்களின் துரித சந்தடிகள் என்பனவும் கிரமப்படுத்துகின்றன.

இவ்விடயங்களை அடியொற்றி, சம்பிரதாயங்களைப் பாதிக்கும் காரணியாகத்தான் நிமித்தம், சகுனம், சோதிட நூல்கள் கூறும் விளக்கங்களின் அடிப்படையில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சம்பிரதாயம் முக்கியமானது. சோதிடமானது அண்டவெளி யில் கவரப்படும் கிரகங்களினா லும், இராசி நட்சத்திரங்களின் பெயர்வு அடிப்படையில் எம் வாழ்வில் சில கருமங்கள் நடைபெறும் என்று கூறுகிறது. அதில் உண்மைகள் இருப்பதும் மறுக்க முடியாதது.

எமது நாடாகிய இலங்கை, உட்பட்ட இந்தியா போன்ற கீழை நாடுகளிலும், ஏன் தமிழர்கள் வாழ்ந்து வரும் வெளிநாடுகளிலும் இன்றும் பஞ்சாங்க நடைமுறைகளைச் சம்பிரதாயமாக எடுத்துக் கொள்வர். முன்னோர் நம்பிக்கைகளோடு, நடைமுறை அனுபவங்களோடும், பாரம்பரியங் களோடும் தொடர்புடைய பஞ்சாங்கச் செய்திகளை நோக்கும் போது தெளியலாம். இவை இன்றும் நம் சமுதாய சம்பிரதாயங்களை ஊடறுத்து செயற்பட வைக்கும் விடயங்களே!

*- எம்.எஸ். ஸ்ரீதயாளன்*
*(அர்த்தமுள்ள சம்பிரதாயம்)*

## சைவ சித்தாந்தத்தில் விடுதலை

சைவ சித்தாந்தத்தில் உயர்ந்த நோக்காகவும், உன்னத இலட்சியமாகவும் அமைவது விடுதலையாகும். இங்கு விடுதலை என்பது முத்தி, வீடு, மோட்சம், நிர்வாணம், அருகத நிலை எனப் பலவாறாக இந்நிலை சுட்டப்படுகின்றன.

மேலும் விடுதலை என்பது பந்தம், கட்டு, மலம், பாசம் என குறிப்பிடப்படுகிறது. அஞ்ஞான நிலையினின்று விடுபடுதலைக் குறித்து நிற்கின்றது மலபந்தங்களிலிருந்து ஆன்மா விடுபட்டு தன் சுயரூபத்தை உணர்ந்து உயரிய நிலைய டைவதே முத்தியாகிறது.இருவினையொப்பும், மலபரிபாகமும் ஆன்மாக்களுக்கு சிவஞானத்தால் வந்துற்ற வேளையில் மலத்தடைகள் நீங்கி, ஒன்றாகி இரண்டற்ற தன்மையால் பரிபூரணமான சிவனைப் பொருந்துதல் மாத்திரமன்றி, அந்தச் சிவமாகவே நிற்பதே சைவ சித்தாந்த முத்திக்குரியதாகும் என சைவசித்தாந்தம் விளக்கமாக விபரித்துக் கூறுகிறது.

# சமய தீபம்



## சக்தி தத்துவம்

சக்தி வழிபாடு மிகத் தொன்மையான காலத்திலிருந்து மக்களிடையே இடம்பெற்று வருகின்றது. உலகம் நடைபெறுவதற்குச் சக்தி இன்றியமையாதது என்பது விஞ்ஞானத்தின் அண்மைக் காலக் கண்டுபிடிப்பு. ஆனால், சக்தியின் இன்றியமையாமையை, மனித நாகரிகம் தொடங்கிய சிந்து வெளி நாகரிக காலத்திலேயே மெய்ஞான ரீதியாக அங்கு வாழ்ந்த மக்கள் அறிந்திருந்தார்கள். சக்தியை மகிமைப்படுத்தும் நோக்கில் அதனை வழிபாடு செய்தனர். தாய்த் தெய்வ வணக்கமாக வளர்ச்சி பெற்றது.

சகல அண்டங்களையும் படைத்து, அவற்றையெல்லாம் காத்தும் இயக்கியும் வருகின்ற மாபெரும் சக்தியை, ஆதிபரா சக்தி என நம்முன்னோர் அழைத்தனர். பயபக்தியோடு வணங்கி வழிபாடு செய்தனர். இது, இந்துப் பண்பாடாகப் பரிணாமம் பெற்று இன்றும் இந்துக்களால் கைக் கொள்ளப் பட்டு வருகின்றது.

சக்தி என்றாலே ஆற்றல், வலல்மை, வலு, உந்து விசை என்று பொருள் கொள்ளப் படுகின்றது. அந்தவகையில் நோக்கும்போது சக்தியின்றேல் எவருக்குமே இயக்கமில்லை. உயிர்ப்பு இல்லை. வாழ்வு இல்லை என்ற நிலை வந்து விடுகின்றது.

சக்தினியக் கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்த நிலையில் வைத்துப் பொற்றப்பட வேண்டிய நிலையில் சக்தி தத்துவம் உருவாகியது. சாக்தம் என்னும் வைதிக சமயப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டது. 'சக்தி இன்றேல் சிவம் இல்லை' என்ற உரத்த முழக்கமும் ஓங்கி ஒலித்தது. ஈற்றில் சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனும் தத்துவம் உலக இயக்கத்தின் தத்துவமாக மலர்ச்சி பெற்றது. 'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' எனத் திருவருட்பயன் கூறுகின்றது.

*- கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்*
*(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்).*

### இவ்வாரத்தின் சுபநேரங்கள்

| | |
|---|---|
| 02.11.2012: | 6.04-7.34 |
| 03.11.2012: | 3.04-4.34 |
| 04.11.2012: | 9.04-10.34 |
| 05.11.2012: | 12.05-1.35 |
| 06.11.2012: | 10.35-12.05 |
| 07.11.2012: | 4.35-6.05 |
| 08.11.2012: | 7.35-9.05 |

(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**
02.11.2012 வெள்ளி: சங்கடஹர சதுர்த்தி விரதம்
ஐப்பசி மூன்றாவது வெள்ளி.

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**
02.11.2012 வெள்ளி: சகல ஆத்துமாக்கள் தினம்

**முஸ்லிம்களுக்குரிய விசேட தினங்கள்**
02.11.2012 வெள்ளி: கலீபா உதுமான் (ரலி) நினைவு தினம்.

## கிறிஸ்தவ நற்சிந்தனை

- வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாய் இருங்கள்.
- மகிழ்வாரோடு மகிழுங்கள். அழுவாரோடு அழுங்கள்.
- நீங்கள் ஒருமனத்தவராய் இருங்கள். உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்வு நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். நீங்கள் உங்களை அறிவாளிகள் எனக் கருதி பெருமிதம் கொள்ளவேண்டாம்.

*(புனித விலிலியத்தின் நீதிமொழிகள் நூலிலிருந்து)*
*தொகுப்பு: ரிஷானி அலோசியஸ்.*

## இஸ்லாமிய நற்சிந்தனை

உள்ளத்தை உறுதிப்படுத்துவதானது நாவை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புபட்டது. ஒரு கதீஸ் பின்வருமாறு இதனைத் தெளிவு படுத்துகிறது. "ஒரு மனிதனுடைய உள்ளம் உறுதியாகாத வரை, அவனுடைய ஈமான் உறுதியாகாது. அவனுடைய நாவு உறுதியாகாதவரை, அவனுடைய உள்ளம் உறுதியாகாது"

*(ஆதாரம்: அஹ்மத்).*

"ஒரு மனிதன் காலைப் பொழுதை அடைகின்றபோது அவனுடைய உறுப்புகள் எல்லாம் நாவுக்கு 'எங்களுடைய விடயத்தில் நீ அல்லாஹ்வுக்குப் பயந்துகொள். நிச்சயமாக நாங்கள் உன்னைக் கொண்டே இருக்கின்றோம். நீ உறுதியானால் நாங்கள் உறுதியாகின்றோம். நீ கோணலானால் நாங்களும் கோணலாகின்றோம்' என்று கூறுகின்றது" என நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருக்கின்றார். *(திர்மிதி)*

## இம்மாதத்தின் சிறப்புத் தினங்களும் விரதங்களும்


நேற்று உதயமாகியுள்ள இந்த நவம்பர் மாதத்தில் இந்து மக்கள் பல சிறப்புத் தினங்களை சந்திக்கவிருக்கின்றார்கள். இன்று (02.11.2012) ஐப்பசி மூன்றாவது வெள்ளிக்கிழமை விரதநாள் என்பதுடன், சங்கடஹர சதுர்த்தி விரத தினமாகும். 9ஆம் திகதி ஐப்பசி கடைசி வெள்ளியாகும். 10ஆம் திகதி (சனிக்கிழமை) ஏகாதசி விரதமும், மறுநாள் 11ஆம் திகதி பிரதோஷ விரதமும் வரு கிறது. 13ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை)அமாவாசை விரத நாளாகும். அதேதினம் கேதார கௌரி விரதமும் நிறைவுபெறு கிறது. அத்துடன் தீபாவளி பண் டிகையும் இதேநாளன்று கொண் டாடப்படுகின்றது.

14ஆம் திகதி (புதன்கிழமை) கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகி 19ஆம் திகதியன்று (திங்கட் கிழமை) நிறைவுபெறுகிறது. அன்றையதினம் ஆலயங்களில் சூரசம்ஹாரம் நடைபெறும்.

17ஆம் திகதி (சனிக்கிழமை) சதுர்த்தி விரதமாகும். 24ஆம் திகதியன்று (சனிக்கிழமை) உத்தான ஏகாதசி விரதம், மறுநாள் 25ஆம் திகதியன்று பிரதோஷ விரதம். 27ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) திருக்கார்த்திகை விரத நாளாகும்.அன்றைய தினம் குமாராலய தீபம் இடம்பெறுகின்றன. மறுநாள் 28ஆம் திகதி (புதன்கிழமை) பூரணை விரத தினம்.

சர்வாலய தீபம் (வீடுகளில் தீபம்), விஷ்ணுவாலய தீபம் என்பன இதே நாளில் இடம்பெறுகின்றது.

29ஆம் திகதி (வியாழக்கிழமை) விநாயகர் விரதம் ஆரம்பமாகின்றது.




## சிந்தனை விருந்து

எந்த ஒரு விடயமாயினும் என்ன செய்வது? எப்படிச் செய்வது? என்று திட்டமிடுங்கள். பலருடன் கூடி ஆலோசனை செய்யுங்கள். மாறாக தனியாக இருந்து கவலைப்படாதீர்கள். கவலை நெருப்பைப் போன்றது. "நான் ஒருபோதும் கவலைப் படத் தேவையில்லை. யாமிருக்கப் பயமேன்" என இறைவன் கூறும் போது நமக்காக அவர் கவலைப்படட்டும்! நான் இறைவனின் குழந்தை என்ற பூரண நம்பிக்கை கொண்ட ஒருவன் எதற்காகவும் தன் புத்தியை அலட்டிக் கொள்ளமாட்டான்.

இறைவனின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருங்கள். நேர்மையாய் முயற்சி செய்யுங்கள். அதைத் தொடர்ந்து கிடைப்பதை இறைவன் கொடுத்ததாக அனுபவியுங்கள். அப்போது எந்தப் பொருளுக்காகவும் கவலைப்படமாட்டீர்கள். அவர் எதை வழங்குகின்றாரோ அதையே அணிகின்றேன். அவர் எனக்கு இவ்வளவுதான் கொடுக்க எண்ணியிருக்கிறார் போலும் என எண்ணி மகிழ்ச்சியடையுங்கள்.

அல்லது அவர் நம்மை இராஜகுமாரன் போல வாழ வைக்க நினைத்திருந்தால் அதையும் ஏற்றுக்கொள்ளுங்கள். எதையுமே அதிஷ்டமாகக் கருதுங்கள்.

*- பிரம்மகுமாரி தாதி பிரகாஷ்மணி.*




ஆனால் பாக்ஸர் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. வாழ்க்கையில் ஒரே ஆசைதான் இருந்தது அதற்கு. அது ஓய்வு எடுத்து கொள்ளுமுன் காற்றாடி யந்திரக் கட்டிட வேலை துவங்கி கொஞ்சமாவது நடந்துவிட வேண்டும் என்பதுதான். ஆரம்பநாட்களில், அதாவது விலங்குப் பண்ணையின் புரட்சிக்குப் பின், முதன் முதலாக விதிகள், சட்ட திட்டங்கள் எல்லாம் வகுக்கும்போது, குதிரைக்கும் பன்றிக்கும் ஓய்வு பெறும் வயது பன்னிரண்டு என்று தீர்மானிக் கப்பட்டது. பசுக்கள் பதினாலாவது வயதிலும், நாய்கள் ஒன்பதாவது வயதிலும், ஆடுகள் ஏழாவது வயதிலும், வாத்துகளும் கோழிகளும் ஐந்தாவது வயதிலும் ஓய்வு பெறலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வயது வந்தவர்களுக்கு தாராளமாக உபகாரச் சம்பளம் அளிப்பது என்றும் தீர்மானமாகியிருந்தது. இது வரை ஒரு மிருகம்கூட உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு ஓய்வு பெறவில்லை. ஆனால் கொஞ்ச நாளாக ஓய்வு, உபகாரச் சம்பளம் என்கிற விஷயங்கள் மட்டும் அடிக்கடி மிருகங்களிடையே பேச்சில் அடிபட்டன. முதலில் ஓய்வு பெற்ற மிருகங்களுக்கு என்று ஒதுக்கியிருந்த வயலில் இப்போது பார்லி விதைத்தாகி விட்டபடியால், பெரிய வயலில் ஒரு பகுதியை வேலி போட்டு புல் தரையாகவும், மேயும் இடமாகவும் ஒதுக்கி வைக்கப்படும் என்ற வதந்தி உலாவியது.


குதிரைக்கு உபகாரச் சம்பளமாக ஒரு நாளைக்கு ஐந்து பவுண்டு தானியமும், பதினைந்து பவுண்டு புல்லும் தரப்படும். இது தவிர கரட், காய்கறி முதலியன விடுமுறை நாட்களில் தரப்படும் என்று பேசிக் கொள்ளப் பட்டது. அடுத்த வருடம் கோடையில் பாக்ஸருக்கு வயது பன்னிரண்டு அடைய இருந்தது. இப்போது, வாழ்க்கை மிகவும் கடினமானதாகத் தான் இருந்தது. முந்திய மாரி காலம் போலவே இந்த மழைக் காலமும் கடுமையான குளிராகவே இருந்தது. உணவும் பற்றாக்குறை தான்.

மீண்டும் ஒருமுறை உணவு அளவுகளெல்லாம் குறைக்கப் பட்டன.

நாய்களுக்கும் பன்றிகளுக் கும் தவிர மற்ற விலங்குகளுக் கெல்லாம் போதிய உணவு கிடைக்க வில்லை. எல்லா மிருகங்களுக்கும் ஒரே மாதிரியான அளவில் உணவு தருவது என்பது விலங்கு தத்துவத்துக்கு ஒத்து வராது என்று ஸ்க்வீலர் பலதரப் பட்ட புள்ளிவிபர தத்துவ தரிசன விளக்கங்களுடன் விலங்குகளிடம் ஸ்தாபித்தது. எது எப்படியானாலும் உணவு பற்றாக் குறை இல்லை என்பதை அது பல தரப்பட்ட புள்ளி விபரங்ளைக் கொண்டு எடுத்துக் காட்டியது. குறைவாகத் தோன்றியதே தவிர உண்மையில் குறைவேயல்ல என்று ஆணித்தரமாக மெய்ப்பித்தது அது. தற்காலிகமாக ஏதோ ஒரு சிறு மாறுதல் தேவைப்பட்டுச் செய்திருப்பது உண்மைதான். அதனால் உணவு குறைந்திருப்ப தாக ஏற்பட்டுவிடாது.

(திங்கள்)

## வரைவோம் வாருங்கள்!



## உலகத்தில் சிறந்தது

நஸ்ருதீன் முல்லா அவர்கள் துருக்கி மன்னரிடம் சில காலம் அமைச்சராக இருந்தார். முல்லாவின் மீது மன்னருக்கு அதிக அபிமானம் இருந்தது. அதனால் அவரை எப்போதுமே தன்னுடன் வைத்துக் கொண்டு அவருடன் உரையாடி மகிழ்ந்தார்.

மன்னர் உணவருந்தும் சமயத்திலெல்லாம் முல்லாவையும் தம்முடன் அமர்ந்து உணவருந்தச் சொல்வார். ஒருநாள் மன்னரும் முல்லாவும் வழக்கம்போல அருகருகே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தனர்.

அன்று பீன்ஸ் கறி சமைக்கப்பட்டிருந்தது. மன்னருக்கு அன்று அதிகமான பசியாக இருந்ததால் பீன்ஸ் கறியை மிகவும் விரும்பிச் சாப்பிட்டார்.

சாப்பாட்டின் இடையே மன்னர் முல்லாவை நோக்கி, "முல்லா உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் பீன்ஸ் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது நீர் என்ன நினைக்கிறீர் ? " என்று கேட்டார்.

"சந்தேகமே வேண்டாம். பீன்ஸ் காய்க்கு நிகராக வேறு காயைச் சொல்லவே முடியாது" என்று முல்லா ஆமாம் போட்டார்.




மன்னர் உடனே சமையற்காரனை அழைத்து "இனி சமையலில் பீன்ஸ் கறிக்குத் தான் முதலிடம் தர வேண்டும். அன்றாடம் ஏதாவது ஒரு உருவத்தில் பீன்ஸை உணவுடன் சேர்ந்து விடு" என்று உத்திரவிட்டார்.

நாள் தவறாமல் உணவில் பீன்ஸை சேர்த்துக் கொண்டதால் மன்னருக்கு அந்த காயின் மீது சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டது.

அன்று சாப்பாட்டின் போது பீன்ஸ் பரிமாறப் பட்டபோது மன்னர் முல்லாவை நோக்கி "உலகத்திலேயே மிகவும் மோசமான காய் பீன்ஸ் என்று தான் நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர் ?" என்று கேட்டார்.

"ஆமாம் மன்னர் அவர்களே, எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நான் அறிந்த மட்டில் இவ்வளவு மோசமான சுவையே இல்லாத பீன்ஸைப் போன்ற காயைக் கண்டதே இல்லை" என்றார் முல்லா

"என்ன முல்லா, பத்து நாட்களுக்கு முன்னால் நான் கேட்டபோது உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் பீன்ஸ் என்று சொன்னீர். இப்பொழுது தலை கீழாக மாற்றிப் பேசுகிறீரே" என்று மன்னர் கேட்டார்.


முல்லா சிரித்துக் கொண்டே "மன்னர் அவர்களே! என்ன செய்வது? நான் தங்களிடம் அல்லவா வேலை பார்க்கிறேன். பீன்ஸிடமல்லவே" என்றார்.மன்னரும் விழுந்து விழுந்து சிரித்தார்.

## சிறுவர் அமுதம்

### ஓநாயும் ஆட்டுக் குட்டிகளும்

ஒரு ஆடு தனது குட்டிகளை ஒரு பட்டறையில் அடைத்து வைத்து விட்டு இரைதேடிப் புறப்பட்டது. அது தனது குட்டிகளைப் பார்த்து "குழந்தைகளே, உள்ளே யாரையும் நீங்கள் விடக்கூடாது. நான் திரும்பி வந்து சத்தம் கொடுத்தால் மட்டுமே நீங்கள் கதவைத் திறக்க வேண்டும்" என்று கூறியது.

இதை ஒரு ஓநாய் மறைந்துநின்று கேட்டது. ஆடு போனதும் ஓநாய் அங்கு வந்தது. மெதுவாக அது பட்டறைக்கு முன்னால் நின்று ஆட்டின் குரலைப் போலத் தனது குரலை மாற்றிப் பேசியது. "குழந்தைகளே! கதவைத் திறவுங் கள். இதோ உங்கள் அம்மா உங்களுக்கு இரை கொண்டு வந்திருக் கிறேன்" என்று கூறியது.



குட்டிகள் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தன. பார்த்து விட்டு "உனது குரல் எங்கள் அம்மா குர லைப் போலத்தான் இருக்கிறது. ஆனால் உன்னுடைய கால்கள் ஓநாயின் கால் களைப் போல இருக்கின்றன. அதனால் உன்னை உள்ளே விட மாட்டோம்" என்று கூறிவிட்டன.

### புதிர்:

"ஒரு குளத்தில் ஒரு அல்லிக் கொடி இருக்கிறது. அதன் பரப்பளவு தினமும் இரட்டிக்கிறது. 48 நாட்களில் அது முழுக் குளத்தையும் நிறைக்கிறது என்றால், அந்த குளத்தின் பரப்பளவின் பாதிக்கு வளர அதற்கு எத்தனை நாட்கள் தேவைப் பட்டிருக்கும்?"

விடை: 47 நாட்கள்

### டியூப் லைட்:

டியூப் லைட்டின் இரு முனைகளிலும் மின் இழைகள் உள்ளன. டியூப் லைட்டை "ஓன்" செய்யும் போது மின்னிழைகள் அதீத வெப்பதுக்கு உள்ளாகின்றன. அதனால் அந்த இழை உலோகம் சிறிதளவு ஆவியாகிறது. அந்த ஆவி, குளிர்ந்த டியூப் லைட் கண்ணாடியில் படிகிறது. நாளாக நாளாக இந்தப் படிவு அதிகமாவதால் டியூப் லைட்டின் இரு புறமும் கருப்பாகத் தெரிகிறது.

### சுடோக்கு எண் 86 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 1 | 5 | 8 | 6 | 4 | 9 | 7 |
| 6 | 4 | 7 | 9 | 2 | 1 | 5 | 3 | 8 |
| 5 | 8 | 9 | 3 | 7 | 4 | 6 | 2 | 1 |
| 9 | 1 | 3 | 7 | 6 | 2 | 8 | 4 | 5 |
| 4 | 6 | 2 | 8 | 1 | 5 | 9 | 7 | 3 |
| 7 | 5 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 |
| 1 | 9 | 5 | 6 | 4 | 7 | 3 | 8 | 2 |
| 2 | 3 | 4 | 1 | 5 | 8 | 7 | 6 | 9 |
| 8 | 7 | 6 | 2 | 3 | 9 | 1 | 5 | 4 |

### சுடோக்கு எண் 87

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 2 | 1 | 4 | 5 | 9 | | |
| | | | | | | 5 | 7 | |
| | 8 | 9 | 3 | 7 | | 1 | 2 | 4 |
| | | | | 3 | 2 | 8 | 1 | |
| | | | | | | | | |
| | 1 | 7 | 9 | 6 | | | | |
| 9 | 3 | 1 | | 2 | 7 | 4 | 8 | |
| | 2 | 8 | | | | | | |
| | | 4 | 6 | 8 | 9 | 2 | 3 | |

# மெக்ஸிக தடய அறிவியல்

மெக்ஸிக அமெரிக்க எல்லைப் பகுதியில் இருக்கும் மெக்ஸிக நகரம் சியுதாத் ஹுவாரஸ் (Ciudad Juárez). போர் நடக்கும் பகுதிகளைத் தவிர்த்து, உலகிலேயே அதிக வன்முறைகள் நடக்கும் பகுதிகளில் ஒன்று. போதைமருந்து கடத்தல் கூட்டமைப்புகளின் கொலை, கடத்தல் போன்ற தொடர்ந்த வன்முறை அச்சுறுத்தல்களாலும், அதை தடுக்க முடியாத ஊழல் அரசாலும் பாதிக்கப்பட்டு வரும் நகரம். இங்கு 80% வரையிலான மக்கள், மாக்கியடோரா (maquiladora) என்றழைக்கப்படும் தொழிற்சாலை வேலைகளுக்காக மெக்ஸிகோ முழுவதிலிருந்தும் வந்து சேரும் ஏழை மக்கள். கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ஆயிரக் கணக்கில் பெண் பாலியல் கொலைகளும் கடத்தல்களும் நடந்திருக்கின்றன. இத்தகைய நகரத்தில் ஒரு தடயவியல் பல் நிபுணர் (Forensic odontologist) மட்கி போன சடலங்களில் வன்முறைத் தடயங்களை மீட்டெடுக்கும் புதிய முறையைக் கண்டறிந்த தற்காக பிரபலமாகி வருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. 2009-லிருந்து 2011-வரை நடந்த போதைமருந்து கடத்தல் கூட்டணிகளுக்கிடையே நடந்த கலவரங்களில் மட்டும் 8000 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதில் அடையாளம் காணப் படாத சடலங்களை ஒவ்வொன்றாக எடுத்து பரிசோதித்து கொண்டுவரும் டாக்டர்.ஹெர்னாண்டஸ் கார்டினாஸ் (Hernández Cárdenas)- க்கு அதிகாரிகளின் ஆதரவு இல்லையென்றாலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஆதரவு அதிகமாக இருக்கிறது.

# கண்ணாடி போன்ற மண்

கண்ணாடி போன்ற மண். கேட்டாலே புதிராக இருக்கிறதல்லவா? செடிகள் எப்படி வளர்கின்றன? விதைகள் எப்படி வேர் விட்டு உயர்ந்து எழுகின்றன என்பது இன்னமுமே அறிவியலுக்குத் தெரியாத மர்மம். ஒரு காரணம் செடிகள் மண்ணடியில் அல்லது மண்ணால் மூடப்பட்டிருக்கையில் இந்த நடவடிக்கையைச் செய்கின்றன என்பது. கருப்பைக்குள் ஒலிக் கற்றைகளைச் செலுத்தி கரு எப்படி உயிராகிறது என்று காண முடிகிற அறிவியலால் இந்த விதைகள் செடிகள் விவகாரத்தை அறிய முடியாமல் இருப்பதைப் பொறுக்க முடியுமா? எனவே இப்போது வருகிறது. ஒளி ஊடுருவும் மண். அதை மண் என்று அழைப்பது சரியா என்று தெரியவில்லை. ஆனால் இனி செடிகள் தம் ரகசியத்தை நம்மிடமிருந்து பொத்தி வைக்க முடியாது என்பது தெரிகிறது. ட்ரான்ஸ்பாரெண்ட் சொஸைட்டி என்று மனிதரின் எதிர்காலச் சமுதாயத்தை அழைக்கிற டேவிட் ப்ரின் (அறிவியலாளர், அறிவியல் புனைவாளர்) நம்மை அக்கருத்தை ஏற்க வைக்க முடியாமல் இருந்திருக்கலாம். மனித மனதின் ரகசியக் குகைகளை என்ன ஒளியால் ஊடுருவி விட முடியும் என்று நினைப்பதே நமக்குப் பழகி இருக்கிறது. குகை வாசிகளாக எத்தனை ஆயிரம் வருடங்கள் இருந்தோமோ நாம், அந்த வளர்ப்பு இன்னும் ஆழ் மனதில் இருக்கிறது போலும். ஆனால் செடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டால், மனிதர்களையும் ஒளி வெள்ளத்தில் ஆழ்த்த எத்தனை காலம் ஆகி விடப் போகிறது. இந்தச் செய்தியைப் பாருங்கள். ஸ்காட்லாந்தின் டண்டீ நகரில் உள்ள ஆபர்டே பல்கலையின் ஆய்வாளர்கள் பாலிமர் கூட்டு ஒன்றை வைத்து இந்த "மண்ணை" உருவாக்கி இருப்பதாகத் தெரிகிறது.

# மூன்றில் ஒன்றாக சுருங்கப்போகும் மக்கள்தொகை

மக்கள் தொகை வளர்ச்சி குறித்து உலகம் அச்சப்பட்ட நாட்கள் போய்விட்டன என்ற ஒரு தகவலை டிஸ்கவர் இதழில் உள்ள ஒரு கட்டுரை சொல்கிறது. அமெரிக்காவின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் முதியவர்களாக இருக்கக்கூடும் என்பதுதான் இந்தக் கட்டுரையின் செய்தி - ஆனால் இதை விவாதிக் கும்போது, உலகெங்கும் உள்ள மக்கள் பரப்பில் முதியோர்களின் பங்கு அதிகரித்து வருகிறது என்ற குறிப்புகள் கிடைக்கின்றன: சமுதாய மாற்றமும் பொருளாதார வளர்ச்சியுமே இதற்கான காரணங்களாக இருகின்றன.

உதாரணத்துக்கு, தாய்வானில் 1950களை விட இன்று பிறப்பு விகிதம் எழுநூறு மடங்கு குறைந்திருக்கிறது. ஜப்பான், பிரேசில் என்று வளரும் நாடுகள் அனைத்திலும் இதுதான் இயல் பாக இருக்கிறது. சராசரியாக குடும்பத்துக்கு 2.1 குழந்தைகள் இருக்கும் தேசங்களின் மக்கள் தொகை நிலையாக இருக்கும்: தாய் தந்தைய ரின் இடத்தில் இரு குழந்தைகள் என்ற விகிதத்தில். ஆனால் உலகிலுள்ள தேசங்களில் ஏறத்தாழ நூற்றுக்கு அறுபதில் பிறப்பு விகிதம் மூன்றுக்குக் கீழும், நூற்றுக்கு முப்பதில் இரண்டுக்குக் கீழு மாய் குறைந்து விட்டன. அதிக மக்கள் தொகையுள்ள சீனாவிலும் கூட இறப்பு விகிதம் 1.5 ஆகவே உள்ளது. இந்தியாவில் 2.6ஆக குறைத்து விட்டது - பிறப்பு விகிதம் குறைந்த காரணத்தால் உலக நாடுகளில் ஜப்பானின் மக்கள் தொகை அடுத்த ஐம்பது ஆண்டுகளில் மூன்றுக்கு ஒரு பங்கு குறைந்து விடுமாம்! கல்வியும் வளர்ச்சியும் எதிர்பாராத விளைவுகளுக்குக் காரணமாகி விடுகின்றன .



# புதிய பற்பசை


ஜெர்மன் தாவர உணவுக் குழு ஒன்று ஒரு புது பற்பசை யைத் தயாரிக்கவிருக்கிறது. இந்தப் பற்பசையில் உயிர்சத்து பி-12 சேர்க்கப்படவிருக்கிறது. தாவர உணவு மட்டுமே உண்ப வர்களும், முதியோரும் வயிற்றில் சேரும் மாத்திரைகளிலிருந்து இந்த ஊட்டச் சத்து சுலபமாக உடலில் ஏற்கப்படுவதில்லை. ஆனால் நாவுக்கடியில் வைக் கப்பட்டு உமிழ்நீரில் கரைந்தால் உடலில் சேர்வது

பொதுவாக உயிர்சத்து பி-12 குறை பாட்டால் பாதிக் கப்படுபவர்கள் என்பது நமக்குத் தெரியும். இது உலகெங்கும் உள்ள ஒரு பிரச் சினை. பி-12 உயிர் சத்து அவ் வளவு எளிதில் மாத்திரைகள், மருந்துகள் வழியே உடலில் சேர்வதும் இல்லை. மேலாக இருக்கிறது (sub-lingual) என்று சொல்லப்படுகிறது. அதனால் இந்த ஜெர்மன் தாவர உணவுக் குழு ஒரு பற்பசை தயாரிப்பு நிறுவனத்துடன் சேர்ந்து தயாரித்த அந்தப் பற்பசை நல்ல விளைவைக் கொடுத்ததாக சோதனைகளில் தெரிய வந்தது.


# விநோத உலகம்

## நலம் செய்யும் நுண்ணுயிரிகள்

எடையுள்ள நுண்ணுயிரிகள் மனிதனின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன - சுகாதாரமான சுற்றுப்புறச் சூழல் நடவடிக்கைகளால் அவற்றை ஒழித்துவிட்டால் நாம் ஆரோக்கியமாக இருக்கலாம் - என்று நம் பள்ளிகளில் சொல்லிக் கொடுத்தது எவ்வளவு பெரிய பிழை! நம் உடலிலுள்ள நுண்ணுயிரிகளைத் திரட்டினால் அவற்றின் எடை இரண்டு கிலோவுக்கும் அதிகமாக இருக்குமாம். மனித மூளையைவிட எடை கூடுதலாக உள்ள இந்த நுண்ணியிரிகள் மனிதனின் கல்லீரலுக்கு இணையாக வேலை செய்கின்றன. மனித இரத்தத்தில் உள்ள மரபணுத் தொகுப்புகளில் முப்பத்தாறு சதவிகிதம் பாக்டீரியாக்கள்தான் என்று சொல்கிறார்கள். மனிதன் வாழத் தேவையான கலோரிகளில் பத்து சதவிகிதத்தை இவை நமக்கு சேகரித்துத் தருகின்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த இவை, மனிதனின் சருமத்துக்கு வெளியேயும் உள்ளேயும் இருக்கின்றன - நம்மைவிட நூறு மடங்கு அதிக அளவில் இவற்றின் மரபணுத் தொகுப்புகள் உள்ளன. ஒரு பார்வையில், நாம் இந்த நுண்ணுயிரிக் குமிழில் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.





# 100 மிலியன் வருடத் தகவல் சேமிப்பு



தகவல் சேமிப்பு என்பது எல்லாச் சமூகத்திற்கும் உள்ள பிரச்சினை. இடம் போதாமையோடு, தகவலைச் சேமிக்கும் ஊடகங்கள் காலாவதி ஆவதும் ஒரு பிரச் சினை. பதனிட்ட தோலில் சேமித்தவை அழியும். கல் வெட்டு கூடத் தேயும். காகிதமோ ஈரமும், வெப்பமும் செய்யும் சேதத்திலிருந்து தப்பித்தாலும், பூச்சிகளின் தாக்குதலுக்கு எளிதில் சிக்குவது. சமீபத்திய மின் காந்த சேமிப்பு முறைகளிலோ பிரச்சினை அவற்றை மீளெடுப்பதற்கு அந்தந்தக் கருவிகள், பதிப்பு முறைகள் அழிவது என்பது ஒரு பிரச்சினை. LP records, Cine-film, Tape decks, Cassettes, CDs, DVDs போன்றன எல்லாமே தகவலை மீட்கத் தக்க கருவிகள் இல்லை யெனில் பயனற்றவையாகின்றன. சிறு சேதம் ஏற்பட் டால் கூட இவை முழுதும் பயனற்றவையாகிவிடும். 100000 வருடங்களுக்கு அப்புறம் கிடைக்குமா என்பது கேள்விக்குரியதே என்கிறது இந்தச் செய்தி அறிக்கை.

# பாம்புப் பண்ணை

பாம்புகள் என்றால் நம்மில் பலருக்கு அதீதப் பயம். குரங்குகளுக்கும் பாம்புகளைக் கண்டால் பயம். மனிதர்களின் பாம்பு குறித்த பயம் குரங்குகளாக இருந்த காலத்திலிருந்து தொடர்வது என்று சில உளவியலாளர்கள் சொல்கிறார்கள் என்றாலும் அதெல்லாம் ஏதோ ஹேஷ்யம் போலத்தான் தெரிகிறது. ஆனால் ஏன் நம்மிடம் சில குணங்கள் இருக்கின்றன என்று தெரிந்ததால் பயம் போய் விடுகிறதா என்ன? அது பாட்டில் தொடர்கிறது. இதை மனதில் வைத்துத் தான், தமிழில் ஒரு கதாசிரியர் கூட குரங்குகளுக்கு பாம்புகள் மீது இருந்த பெரும் பீதியை வைத்து ஒரு குறியீட்டுக் கதை எழுதினார். சமகாலத் தமிழக அரசியல் குறித்த ஒரு அங்கதக் கதையாக அதைப் பார்க்க முடியும் என்பது அத்தனை எளிதாகப் புலப்படாததாலோ என்னவோ அவர் வீட்டில் கற்கள் எறியப் படவில்லை என்று நினைக்கிறேன். இங்கு ஒருவர் பாம்புகளை வைத்து ஏராளமாகப் பணம் பண்ணுவது எப்படி என்று அறிந்து அதைச் செய்கிறார். பாம்பு விஷத்தை வடித்து அதை மருந்து நிறுவனங்களுக்கு விற்கிறார். இதென்ன பிரமாதம்? சென்னையில் ரொமுலஸ் விட்டேகர் என்பவர் இருளர் சமூகத்தின் அசாதாரண மனிதர்களை, அசகாய சூரர் களை வைத்து நடத்தும் ஒரு பாம்புப் பண்ணை கூட இதே தான் பல பத்தாண்டுகளாகச் செய்து கொண்டிருக்கிறதே என்பீர்கள். ஆனால், இந்த மனித ரின் செயலை அப்படி வியந்து ஒரு கட்டுரை இங்கே எழுதுகிறார்கள்.



# சான்டி புயல் இதயத்தை உடைத்து விட்டது: பராக் ஒபாமா உருக்கம்



சான்டி புயலின் பாதிப்புகள் இன்னும் தீரவில்லை என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நியூயார்க் நகரில் மட்டும் சான்டி புயல் பாதிப்பால் 18 பேர் உயிரிழந்துள்ளனர். நியூயார்க், நியூஜெர்ஸி பகுதிகளில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.


போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்ந்து முடங்கியுள்ளன. ஓரிரு பகுதிகளில் மின் விநியோகம் தொடங்கியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்காவை சான்டி புயல் புரட்டிப் போட்டுள்ளது.

புயலின் தாக்கம் இன்னும் குறையவில்லை என எச்சரிக்கை விடுத்துள்ள ஜனாதிபதி ஒபாமா, இதனை பேரிடர் என அறிவித்துள்ளார். இந்தப் புயல் இதயத்தை உடைத்து விட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ஒபாமா ஆலோசனை நடத்தினர்.

# ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை திட்டத்தில் விரைவில் மாற்றம்



சீனாவில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை என்ற திட்டத்தில் விரைவில் மாற்றம் வரவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

உலகிலேயே சீனாவில் தான் மிக அதிகமான (130 கோடி) மக்கள் வசிக்கின்றனர். அங்கு மக்கள் தொகை பிரச்சினையை சரிகட்ட கடந்த 1980ஆம் ஆண்டு முதல் கடந்த 30 வருடங்களாக ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை என்ற கொள்கையை கம்யூனிஸ்ட் அரசு சட்டமாக்கியுள்ளது.

ஒரு குழந்தைக்கு பிறகு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வது கட்டாயம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த திட்டத்தினால் சீனாவில் 40 கோடி குழந்தைகளின் பிறப்பு தடுக்கப்பட்டுள்ளது.

இருந்தும் அங்கு மக்கள் தொகை பெருக்கத்தால் எதிர்மாறான வளர்ச்சி, கருத்தரிப்பு பிரச்சினை, ஆண்-பெண் மலட்டுத் தன்மை மற்றும் குழந்தைகளுடன் மக்கள் அதிகம் இடம்பெயர்வதால் ஏற்படும் நகர விரிவாக்கப் பிரச்சினை போன்ற தடைகள் இருப்பதாக சீனா மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.

இதனால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை கைவிட்டு மக்கள் தங்கள் சுய பகுத்தறிவின்படி இந்த விஷயத்தில் செயல்பட விடவேண்டும் என்றும் அந்த நிறுவனம் எச்சரிக்கிறது. இதனால் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்று அதிகாரிகள், அறிஞர்கள் கொண்ட உயர்மட்டக்குழு தெரிவித்துள்ளது.

சீன கம்யூனிஸ்ட் ஆட்சியின் தலைமை இந்த மாதம் மாறவுள்ள நிலையில், அங்கு மக்கள் தொகை குறித்த கொள்கையில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

# ஜனாதிபதி தேர்தல்: வாக்காளர்களை கவர்வதற்காக இலவசங்கள் அறிவிப்பு




அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வாக்காளர்களுக்கு இலவச யோகா பயிற்சி அளிக்கப்படும் என விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வருகிற 6ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமாவும், குடியரசு கட்சி சார்பில் மிட் ரோம்னியும் போட்டியிடுகின்றனர்.

இருவரும் தீவிர பிரசாரம் செய்து வந்த நிலையில், தற்போது சான்டி புயல் இவர்களது பிரசாரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

வாக்காளர்களை கவர்வதற்காக பல்வேறு நிறுவனங்கள் இலவச பொருட்களை அறிவித்துள்ளன.

வாஷிங்டனில் உள்ள யோகா பயிற்சி மையம் வாக்காளர்களுக்கு இலவச பயிற்சி அளிக்க முன்வந்துள்ளது.

வாக்களிப்பதற்கான அடையாளத்தை காட்டி இந்த பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம் என மைசூரை சேர்ந்த இந்த யோகா பயிற்சி மையம் தெரிவித்துள்ளது.

இதே போல பிசா ஹட் நிறுவனம் இலவசமாக பீட்சாவையும், சுடசுட காபியையும் வாக்காளர்களுக்கு வழங்குவதாக தெரிவித்துள்ளது.

ஜெட் ப்ளூ நிறுவனம் இலவச விமான சேவையை அறிவித்துள்ளது.

# அமெரிக்காவில் சுரங்க ரயில் பாதைகளில் வெள்ளம்: போக்குவரத்து கடுமையாக பாதிப்பு

அமெரிக்காவை உலுக்கிய சான்டி புயலால் 1,000 கி.மீ தூரம் கொண்ட சுரங்க ரயில் பாதைகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

நியூயார்க் சுரங்க போக்குவரத்து 108 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 1,000 கி.மீ.க்கும் அதிகமான தூரம் கொண்ட இந்த சுரங்க போக்குவரத்து பாதையில் 468 ஸ்டேஷன்கள் உள்ளன.

கடல் மற்றும் ஆறுகளுக்கு அடியில் சில நிலையங்கள் உள்ளன. பலத்த மழையால் ரயில் பாதைகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

மின்சாரம் இல்லாததால் இந்த ரயில் நிலையங்களில் உள்ள தண்ணீரை இறைக்க முடியவில்லை. ஒரு நாளைக்கு 14 மணி நேரம் என்ற அளவில் நான்கு நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீரை இறைத்தால் தான், ரயில் பாதை சீராகும்.

அதுமட்டுமல்லாது வெள்ளத்தால் மின்சார கருவிகள் பழுதுப்பட்டுள்ளன. இவற்றை சீர்படுத்த இன்னும் 10 நாட்களாகும் என நியூஜெர்சி நிர்வாகம் அறிவித்துள்ளது. நியூஜெர்சியில் டெலாவர் நதிக்கருகே உள்ள இரண்டு அணு சக்தி நிலையங்கள் புயல் காரணமாக மூடப்பட்டன. நியூயார்க்கில் உள்ள புச்சானன் அணுசக்தி நிலையத்திலும் பணிகள் நிறுத்தப்பட்டன.

# உலக பார்வை

## சவப்பெட்டிக்குள் பதுங்கி பிரிட்டனில் நுழைய முயன்றவர்கள் கைது

சவப்பெட்டிகள் எடுத்து சென்ற வாகனத்துக்குள் பதுங்கி பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவ முயன்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் பிரிட்டனில் சட்டவிரோதமாக குடியேறி வருகின்றனர். இவர்களை தடுக்க அந்நாட்டு எல்லை பாதுகாப்பு படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நாய் பிஸ்கட்டுகள் வைக்கப்படும் பெட்டி, குளியல் தொட்டி உள்ளிட்டவற்றில் பதுங்கி பிரிட்டன் எல்லைக்குள் ஊருருவது வாடிக்கையாக உள்ளது.

இதற்கிடையே பல்கேரியா நாட்டிலிருந்து, பிரிட்டனுக்கு சவப்பெட்டிகளை ஏற்றிக்கொண்டு ஒரு வாகனம் வந்தது.

வழக்கம் போல் எல்லையில் உள்ள சோதனை சாவடியில் பிரிட்டன் பாதுகாப்பு படையினர் இந்த வாகனத்தை பரிசோதித்தனர். அப்போது சவப்பெட்டிகளுக்கிடையே மூன்று பேர் ஒளிந்திருந்தனர்.

ஆப்ரிக்காவில் உள்ள எரித்திரியா நாட்டை சேர்ந்த இந்த மூன்று பேரையும் பொலிசார் கைது செய்தனர். இவர்கள் பிரான்ஸ் நாட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



கோசாவா தலைநகர் பிரிஸ்டினியாவில் அந்நாட்டு அதிபர் அட்படே ஜாக்சகாவை சந்தித்து பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன்.

## இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்தார் 61 வயது பாட்டி



பிரேசில் நாட்டை சேர்ந்த 61 வயது பாட்டி இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

பிரேசில் நாட்டின் சாவ்பாவ்லோ என்ற இடத்தை சேர்ந்தவர் ஆன்டோனியா ஆஸ்ட்டி(வயது 61). இவரது கணவர் ஜோஸ்(வயது 55).

இந்த தம்பதியருக்கு திருமணமாகி 30 வருடங்கள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை.

இதனையடுத்து குழந்தையை தத்து எடுத்து கொள்ளலாம் என்று முடிவு செய்த நிலையிலும், முதுமை காரணமாக மறுக்கப்பட்டது.

இந்நிலையில் செயற்கை முறையில் குழந்தைப்பேறு அடைய முடிவு எடுத்தனர். ஆஸ்ட்டி முதல்முறையாக 10 ஆண்டுகளுக்கு முன்பாக இதற்காக முயற்சி எடுத்தார். ஆனால் பலன் இல்லை. இரண்டாவது, மூன்றாவது முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.


இப்போது 4-வது முறையாக 10 ஆண்டுகளுக்கு முன் உறைய வைக்கப்பட்ட விந்தணுக்கள் மூலம் செயற்கை கருத்தரித்தல் முறையில் இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்தார் ஆன்டோனியா.

மகனுக்கு ராபர்ட்டோ என்றும், மகளுக்கு சோபியா என்றும் பெயரிட்டுள்ளனர்.

# நீலம் புயலுக்கு 8 பேர் உயிரிழப்பு

தமிழகத்தின் அச்சுறுத்தலாக விளங்கிய நீலம் புயலுக்கு இது வரை 8 பேர் மரணமடைந்துள்ளனர்.

மாமல்லபுரம் அருகே கரையை கடந்த நீலம் புயல் வலுவிழுந்து தமிழகத்தின் உள் மாவட்டங்கள் வழியாக சென்று ஆந்திராவை சென்றடையும் என்று சென்னை வானிலை மையம் கூறி இருக்கிறது. தமிழகத்தின் உள் மாவட்டங்கள் வழியாக புயல் வலு விழந்து பயணம் செய்யும் போது அந்த பகுதியில் மழை பெய்வதுடன், சூறைக்காற்றால் பாதிப்பு ஏற்படலாம் என்றும் வானிலை மையம் தெரிவித்து இருக்கிறது. இதனால் அப்பகுதி மக்கள் தேவையான முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிகபட்சமாக வந்தவாசியில் 19 சென்டி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.



**8 பேர் உயிரிழப்பு**

இதனிடையே, புயலுக்கு திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒருவரும், வேலூர் மாவட்டத்தில் 4 பேரும் உயிரிழந்துள்ளனர். சென்னை அருகே புயல் காரணமாக கரை ஒதுங்கிய கப்பலில் இருந்து தப்பிய மாலுமி ஒருவர் உயிரிழந்தார்.

**மாலுமிகள் மீட்பு**

இதற்கிடையே நீலம் புயலில் சிக்கி கடலில் தத்தளித்து வந்த 15 மாலுமிகள் மீட்கப்பட்டுள்ளனர். மாயமான மேலும் 6 மாலுமிகளை தேடும் பணி நடை-பெற்று வருகிறது. சரக்கு ஏற்றி கொண்டு மாலுமிகளுடன் வந்த கப்பல் சென்னையை கடந்து சென்ற போது நீலம் புயல் காரணமாக நேற்று தரைதட்டியது. கப்பலில் வந்த மாலுமிகள் கரைக்குத் திரும்ப முடியாமல் தவித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# விசாரணையை சந்திக்க தயார்: நிதின் கட்காரி ஆவேசம்

என் மீது கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் எந்த விசாரணையையும் சந்திக்க தயார். காங்., தலைவர் சோனியாவின் மருமகன் ராபர்ட் வதேரா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து, விசாரணையை எதிர் கொள்ள, காங்., கட்சியினர் தயாரா? என, பா.ஜ., தலைவர், நிதின் கட்காரி கூறினார்.பா.ஜ., தேசிய தலைவர் நிதின் கட்காரி, மும்பையில் நேற்று செய்தியா-ளர்களுக்கு அளித்த பேட்டியில்,

அரவிந்த் கெஜ்ரிவாலும், காங்கிரஸ் கட்சியினரும், எனக்கு எதிராகப் பொய் புகார்களை கூறியுள்ளனர்.

மகாராஷ்டிராவில், தேசியவாத காங்., கட்சியினருடன், எனக்கு நெருங்கிய தொடர்பு உள்ளதாகவும், நில அபகரிப்பில் ஈடுபட்டதாகவும் கூறுகின்றனர்.

கம்பெனிகள் தொடர்பான சட்ட விதிமுறை களை மீறியதாகவும், புகார்களை அவிழ்த்து விடுகின்றனர்.

இந்தப் புகார்கள் அனைத்தும் பொய். காங்கிரஸ் கட்சியினர், மீடியாக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, எனக்கு எதிரான சதிச் செயலில் ஈடுபட்டுள்ளனர். என



க்கு, யாருடனும் வர்த்தக தொடர்பு இல்லை. விவசாயிக-ளின் வாழ்க்கை தரம் உயருவதற்காக, சமூக நலன் சார்ந்த சில நிறுவனங்களை நடத்தி வருகிறேன். யாரிடமும் நிலத்தையோ, பணத்தையோ, நான் அபகரித்தது இல்லை. எனக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை பார்த்து, பயப்படப் போவது இல்லை.

பா.ஜ., தலைவராக, மூன்று ஆண்டுகளாக பதவி வகித்து வருகிறேன். இதுவரை என்னுடைய பதவியை, தவறாக பயன் படுத்தியது இல்லை. என்னுடைய பதவி காலத்தில், பா.ஜ., வளர்ச்சிப் பாதையில் வெற்றி நடை போடுகிறது. வரும், 2014இல் நடக்கவுள்ள லோக்சபா தேர்தலில், பா.ஜ., நிச்சயமாக ஆட்சியைப் பிடிக்கும் பா.ஜ.,வைச் சேர்ந்த தலைவர் ஒருவர் தான், பிரதமர் நாற்காலியில் அமர்வார்.

பா.ஜ., சாதாரண மக்களின் கட்சி காங்கிரஸ், ஊழல் பேர் வழிகளின் கட்சி. மகாராஷ்டிராவில், சிவசேனா - பா.ஜ., கூட்டணி ஆட்சியின் போது, பொதுப் பணித் துறை அமைச்சராக பதவி வகித்தேன். அப்போதும், எந்த முறைகேட்டிலும் ஈடுபடவில்லை.

மும்பை - புனே விரைவு நெடுஞ்சாலை திட்டத்தைச் செயல்படுத்தியதில், வெளிப்படையான போக்கு பின்பற்றப்பட்டது. இதில் எந்தவிதமான ஒளிவு மறைவும் இல்லை.


என் வீட்டில் பணியாற்றிய பெண்ணின் மகள், விபத்தில் இறந்ததை, பாலியல் விவகார வழக்காக, தற்போது சித்தரிக்க முயற்சிக்கின்றனர். இதன் மூலம், காங்., கட்சி, எந்த அளவுக்கு இறங்கி வந்துள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு நிதின் கட்காரி கூறினார்.

# தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விட்டால் மீண்டும் போராட்டம்: மாதே கவுடா மிரட்டல்

தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட்டால், மீண்டும் போராட்டம் வெடிக்கும், என, காவிரி நதி நீர் பாதுகாப்பு கமிட்டி தலை வர், மாதே கவுடா தெரிவித்தார்.

டில்லியில் நேற்று நடந்த காவிரி கண்காணிப்பு குழு கூட்டத்தில், தமிழகத்துக்கு, 5.5 டி.எம்.சி., தண் ணீர் திறந்து விட வேண்டும் என, குழு கூறியது. ஆனால், 4 டி.எம்.சி., தண்ணீர் மட்டுமே, திறந்து விட முடியும் என, கர்நாடகம் கூறியுள் ளது. இதையறிந்த கர்நாடக விவசாயிகள், கன்னட அமைப்புகள் பெரும் கொந்தளிப்பில் உள்ளனர்.

மாண்டியா காவிரி நதி நீர் பாதுகாப்பு தலைவர், மாதே



கவுடா கூறியதாவது:

இன்று, இது குறித்து முதல்வர் ஜெகதீஷ் ஷெட் டருடன் பேச உள்ளேன். கர்நாடகத்திலிருந்து, ஒரு சொட்டு தண்ணீர் கூட தமிழகத்துக்கு விடக்கூடாது என்ற, எங்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. தமிழகத்துக்கு, தண்ணீர் விடுவதற்கு ஒப்புக் கொண்டுள்ள கர்நாடக தலைமை செயலர், ரங்கநாத்தை சஸ்பெண்ட் செய்ய வேண்டும். கர்நாடகா விவசாயிகள், கன்னட அமைப்பினர் குரலுக்கு எதிராக, முதல்வர் ஷெட்டர் தண்ணீர் திறந்து விட்டால், பெரும் போராட்டம் நடத்தப்படும், என்று அரசை எச்சரிக்கிறோம். முதல்வரை சந்திக்கும் போது, விளக்கமாக எடுத்து கூறுவேன்.

கர்நாடகத்தில் விவசாயத்துக்கும், குடிப்பதற்கும் தண்ணீர் பற்றாக் குறை உள்ளது.

இந்நிலையில், காவிரி கண்காணிப்பு குழு அளித்திருக்கும் தீர்ப்பு, ஏற்கதக்கதல்ல. இவ்வாறு மாதே கவுடா கூறினார்.

## இந்திய செய்திகள்

# தே.மு.தி.க எம்.எல்.ஏக்கள் மீது சபாநாயகர் குற்றச்சாட்டு

சட்டப்பேரவை வளாகத்தில் பேட்டியளித்தது தொடர்பாக தே.மு.தி.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீது சபாநாயகர் பி.தனபால் உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவந்தார்.

கடந்த 29ஆம் திகதி சட்டப் பேரவை கூட்டம் முடிந்ததும், தே.மு.தி.க உறுப்பினர்கள் தன்னிடம் முதல்வர் ஜெயலலிதாவை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தர கோரியதாகவும், அதற்கு முதலமைச்சர் செயலரிடம் வழங்க கூறியதாகவும் கூறினார்.

ஆனால், மலிவான விளம்பரம் தேடும் வகையில், சட்டப்பேரவை வளாகத்தில் பேட்டி அளித்துள்ளனர்.

இது சட்டப்பேரவை விதிகளை மீறும் செயல் என்பதால், அவர்கள் மீது சட்டமன்ற உரிமை



குழுவுக்கு அனுப்புவதாக தெரிவித்தார்.

இதேப்போன்று, சட்டமன்ற உறுப்பினர் சுந்தரராஜனை, சட்டையைப் பிடித்து பார்த்தசாரதி, தினகரன் ஆகியோர் தாக்கியது தொடர்பான பிரச்சினையை உரிமைக்குழுவுக்கு சபாநாயகர் அனுப்பியுள்ளார்.



மத்திய ரயில்வேக்குச் சொந்தமான ரயில்களில் பெண்கள் மட்டும் பெட்டிகளில் கண்ணாடி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. மும்பை புறநகர் பயணிகள் ரயிலில் இறங்கும் இடம் வந்ததும் கண்ணாடியில் சிகை அலங்காரம் செய்து கொள்ளும் பெண்.

# இரட்டை வேடமிடும் பா.ஜ.க: சோனியா பேச்சு

ஊழலை ஒழிப்பதில் பாரதிய ஜனதாக் கட்சி இரட்டை வேடமிடுவதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

ஹிமாசலப் பிரதேச மாநிலம் ரிட்ஜ்கிரவுண்டு பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட சோனியா, பாரதிய ஜனதா மீது குற்றஞ்சாட்டி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது, ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

மேலும் ஊழல் புகாரில் சிக்கிய காங்கிரஸார் மீது எங்கள் கட்சி மட்டுமே கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆனால் ஊழலை ஒழிப்பதாகக் கூறும் பா.ஜ.க, ஊழல் குற்றச் சாட்டுக்கு உள்ளான தனது கட்சித் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. இது விடயத்தில் பா.ஜ.க இரட்டை வேஷமிடுகிறது என்றார்.

பா.ஜ.க. ஊழலுக்கு எதிராகப் போராடவில்லை, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக போராடி வருகிறது.

ஊழலை ஒழிப்பதற்காக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு லோக்பால் சட்ட மசோதாவைக் கொண்டு வந்தது.

ஆனால் அதை மாநிலங்களவையில் நிறைவேற்ற விடாமல் பா.ஜ.க. தடுத்து விட்டது என்றார்.

# மின்வெட்டிற்கு தி.மு.க.வை குற்றம் சாட்டும் ஜெயலலிதா

தமிழகத்தில் நிலவும் தற்போதைய மின்வெட்டுக்கு தி.மு.க ஆட்சியே காரணம் என்று முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு தமது ஆட்சிக்காலத்தில் புதிய மின்திட்டங்கள் தொடங்கப்பட்டதாகவும், ஆனால் தமது ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டவை என்பதால் அடுத்து வந்த தி.மு.க அரசு அந்த திட்டங்களை முடிக்க ஆர்வம் காட்டவில்லை என்று ஜெயலலிதா சட்டசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மேலும் மின்திட்டங்கள் குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதி தவறான தகவல்களை தெரிவித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

# பிரீத்தி ஜிந்தாவுடன் புகைப்படமெடுத்த யுவ்ராஜ்

இந்திய கிரிக்கெட் வீரர் யுவ்ராஜ் சிங், பஞ்சாப் அணியின் உரிமையாளரான பிரீத்தி ஜிந்தா இருவரும் பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.


புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீண்டு வந்திருக்கும் யுவ்ராஜ் சிங், கிரிக்கெட் போட்டிகள் மட்டுமல்லாது பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார்.

கடந்த டி 20 போட்டிகளில் தனது துடுப்பாட்டத்தை திறம்பட வெளிப்படுத்தினார் யுவ்ராஜ்.

இந்நிலையில் பாலிவுட்டின் பிரபல பாடகி சோபி சௌத்ரியின் புதிய ஆல்பம் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் யுவ்ராஜ்.

அவருடன் பஞ்சாப் அணியின் உரிமையாளரும் நடிகையுமான பிரீத்தி ஜிந்தாவும் கலந்து கொண்டார்.

இவர்கள் இருவரும் நீண்ட நாட்களுக்கு பின்னர், மிக நெருக்கமாக நின்று புகைப்படமெடுத்துக் கொண்டனர்.



# சங்கானைக் கோட்டமட்ட உதைபந்தாட்ட போட்டி

சங்கானை கோட்டப் பாடசாலைகளுக்கு கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது. இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

14 வயது பிரிவில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி முதலிடத்தையும், யாழ்ப்பாண கல்லூரி இரண்டாமிடத்தையும், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

16 வயது பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் முதலிடத்தையும், அராலி இந்துக் கல்லூரியும் இரண்டாமிடத்தையும், வட்டு இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

18 வயது பிரிவில் வட்டு மத்திய கல்லூரி முதலிடத்தை யும், விக்டோரியாக் கல்லூரி இரண்டாமிடத் தையும், வட்டு இந் துக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

# மும்பை இண்டியன்ஸ் அணியிலிருந்து ஹர்பஜன் நீக்கமா?



மும்பை இண்டியன்ஸ் அணியிலிருந்து அணித்தலைவர் ஹர்பஜன் சிங் நீக்கப்படுவதாக தகவல் வெளியானது.

கடந்த 2011ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்ற இந்திய அணியில் இருந்து ஹர்பஜன் சிங் (வயது 32) நீக்கப்பட்டார்.

அந்த ஆண்டு சாம்பியன்ஸ் லீக் தொடரில் மும்பை இண்டியன்ஸ் அணியின் தலைவராக இருந்து கிண்ணத்தை வென்று தந்தார்.

இருப்பினும் இந்திய அணியில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டார். சமீபத்திய சாம்பியன்ஸ் லீக் தொடரில், இவரது தலைமையில் ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை. இந்திய அணிக்கு மீண்டும் திரும்பும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது.

இதனிடையே 2013ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கும் அணிகள், வீரர்கள் விவரத்தை நேற்று மாலைக்குள் இறுதி செய்யுமாறு பணிக்கப்பட்டது.

இதனால் ஒவ்வொரு அணிகளும் தேவையற்ற வீரர்களை விடுவித்து வருகின்றன. புனே அணியில் இருந்து நியூசிலாந்தின் ரைடர் நீக்கப்பட்டார்.

தற்போது மும்பை அணியில் இருந்து ஹர்பஜன் சிங்கையும் நீக்கியுள்ளதாக செய்திகள் வெளியாகின.

ஆனால் இச்செய்திக்கு மறுப்பு தெரிவித்த ஐ.பி.எல் அதிகாரி ஒருவர் கூறுகையில், இது முற்றிலும் அடிப்படையற்ற செய்தி. மும்பை அணியில் தான் ஹர்பஜன் சிங் நீடிக்கிறார். எதிர்காலத்திலும் இருப்பார். இதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார்.

# தென் ஆப்ரிக்க கிரிக்கெட் வாரியத்திடம் கோரிக்கை விடுத்துள்ள இலங்கை

தென் ஆப்ரிக்க கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாட திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த சுற்றுப்பயணத்தை தள்ளி வைக்குமாறு இலங்கை கிரிக்கெட் வாரியம், தென் ஆப்ரிக்க கிரிக்கெட் வாரியத்திற்கு கோரிக்கை வைத்துள்ளது.

இந்த தொடருக்கு முன்னதாக இந்தியா, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் போட்டி நடக்கிறது.

அதைத் தொடர்ந்து ஐசிசி சாம்பியன் கிண்ணத்தையும், உள்ளூர்

Sri Lanka Cricket

20-20 தொடரும் நடைபெறுகிறது.

இந்த காரணங்களாலேயே தென் ஆப்ரிக்க போட்டியை தள்ளி வைக்க வேண்டுமென இலங்கை வாரியம் கேட்டு கொண்டுள்ளது.

ஆனால் போட்டி மாற்றி அமைக்கப்பட்டால் ஒளிபரப்பு உரிமம் தொடர்பாக பிரச்னை எழும் என தென் ஆப்ரிக்க வாரியம் அஞ்சுகிறது.

# பிசிசிஐ விருது வழங்கும் விழா: கோஹ்லிக்கு விருது

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் விருது வழங்கும் விழாவில் சச்சின் டெண்டுல்கருக்கு பாராட்டும், வீரட் கோஹ்லிக்கு விருதும் வழங்கி கௌரவப்படுத்தப்பட உள்ளனர்.

பிசிசிஐ விருது வழங்கும் விழா, மும்பையில் வருகிற 21ஆம் திகதி நடக்கவுள்ளது. இவ்விழாவில் கிரிக்கெட்டில் சாதனை புரிந்தவர்கள் கௌரவப்படுத்தப்படுவர்.

இதில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சதத்தில் சதமடித்த சச்சின் பாராட்டப்படுவதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

அதே போல் 2012-2013ஆம் ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் விருதைப் பெற்ற வீரட் கோஹ்லிக்கு இவ்விழாவில் பாலி உம்ரிகர் விருதும் ரூ. 5 லட்சத்துக்கான காசோலையும் அளிக்கப்படும் என்று பிசிசிஐ தெரிவித்துள்ளது.

இவ்விருதை 2006, 2009ஆம் ஆண்டுகளில் சச்சினும், 2007ஆம் ஆண்டு ஷேவாக்கும், 2011ஆம் ஆண்டில் திராவிட்டும் பெற்றனர். சமீபத்தில் ஓய்வு பெற்ற விவிஎஸ் லட்சுமணன், இவ்விழாவில் கௌரவப்படுத்தப்பட உள்ளார்.

மேலும் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான விஜய் மர்ச்சென்ட், தாட்டு பாட்கர், விஜய் மஞ்ச்ரேக்கர், வினு மன்டக், குலாம் அகமது, எம்எல் ஜெய்சிம்மா, திலீப் சர்தேசாய் உள்ளிட்டோரும் கௌரவப்படுத்தப்பட உள்ளனர்.



இவர்களின் குழந்தைகளுக்கு கிண்ணமும், தலா ரூ. 15 லட்சத்துக்கான காசோலையும் வழங்கப்படும் என்றும் பிசிசிஐ தெரிவித்துள்ளது.

இவ்விழாவில் முன்னாள் அணித் தலைவர் சுனில் கவாஸ்கருக்கு சிகே நாயுடு வாழ்நாள் சாதனை விருது அளிக்கப்படும் என்று பிசிசிஐ முன்னரே அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்துக்கெதிரான இலங்கை போட்டி ரத்து

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான ஒற்றை டி20 போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி மழை காரணமாக தாமதித்து ஆரம்பித்திருந்தது.

இப்போட்டியில் 16 ஓவர்கள் மட்டுமே வீசக்கூடியதாக அமைந்திருந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணியின் புதிய தலைவர் ஏஞ்சலோ மேத்யூஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை மீண்டும் குறுக்கிட்டது. மீண்டும் போட்டி 14 ஓவர்கள் கொண்ட போட்டியாக ஆரம்பித்தது.



14 ஓவர்களில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பி.ஜே.வற்லிங் 16 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓரம் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர, அகில தனஞ்சய, திஸர பெரேரா தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

டக்வொர்த் லூயிஸ் முறையின் அடிப்படையில் 14 ஓவர்களில் 72 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது.

தொடர்ச்சியான மழை காரணமாகப் போட்டி மீண்டும் ஆரம்பிக்கப்பட முடியாததால் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

# இருமல், ஜலதோஷத்தால் அவதிப்படும் டோனி

ரஞ்சி கிண்ண தொடருக்கான இந்திய அணியில் சச்சின், ஷேவாக், கம்பீர் உள்பட முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இருமல், ஜலதோ'த்தால் அவதிப்படுவதால் டோனி பங்கேற்கவில்லை.

இது குறித்து டோனி கூறுகையில், கடந்த ஆறு முதல் ஏழு ஆண்டுகளாக இந்திய அணிக்காக சர்வதேச போட்டிகளில் பங்கேற்று வருகிறேன்.

இம்முறை ஜார்க்கண்ட் கிரிக்கெட் சங்கம், முழு உடற்தகுதியுடன் இருக்கிறீர்களா எனக் கேட்டது.

எனக்கு இருமல், ஜலதோஷம் இருப்பதால் ரஞ்சி போட்டிக்கு தெரிவு செய்ய வேண்டாம் என கூறிவிட்டேன் என்றார்.

# இந்தியா ஏ அணிக்கு எதிரான தொடரில் ஸ்டிவனுக்கு ஓய்வு?

இந்தியா ஏ அணிக்கு எதிரான தொடரில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டிவன் பின் பங்கேற்க மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா ஏ அணியுடனான பயிற்சி ஆட்டத்தின் முதல் நாள் ஆட்டத்தின் போது இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டிவன் பின் காயம் அடைந்தார்.

இதனையடுத்து எஞ்சியுள்ள ஆட்டத்தில் களமிறங்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் சில நாட்கள் ஓய்வெடுக்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். தனால் மும்பை ஏ அணியுடனான பயிற்சி ஆட்டத்திலும் அவர் விளையாடுவது கேள்விக் குறியாகி உள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 02.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது